உ

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீராமசந்த்ரபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்.

நோட்டுகள்.

ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் பி. ஏ.

MADRAS
THE GUARDIAN PRESS
MOUNT ROAD
1911

Title Page Printed at the Wednesday Review Press.

பாலகாண்டம் நோட்டுகள்.

ராமாயண பீடிகை.

I.

ராமாயண மென்னும் பதத்தின் அர்த்தம்.

இந்தப் பதத்திற்கு ராமனுடைய சரிதத்தைச் சொல்லும் க்ரந்தம் என்று அர்த்தம். இந்தப் பெயர் ராமனுடைய சரிதத்தைச் சொல்லும் எல்லா க்ரந்தங்களுக்கும் பொதுவாயிருக்க வேண்டுமானாலும், வால்மீகியால் செய்யப்பட்டதற்கே சொந்தமானது.

பதங்கள் மூன்று வகை.—1. ரூடம். 2. யோகம். 3. யோகரூடம். 'கிருஷ்ணன்' முதலிய பெயர்ச் சொற்கள் ரூடங்கள்; இதையே தமிழில் 'இடுகுறி' என்பார்கள்.

காரணப்பெயரான 'தாசரதி' முதலியவைகள் யோகமென்று சொல்லப்படும். யோகரூடமென்பது 'பங்கஜம்' முதலிய பதங்கள் இதற்கு 'சேற்றில் முளைத்தது' என்ற அர்த்தமாகையால், அல்லி முதலியவை சேற்றில் முளைக்கிற தன்மையுள்ளவைகளானாலும், அவை அர்த்தமாகிறதில்லை; தாமரைக்கே பெயர். இதையே தமிழில் 'காரண இடுகுறி' என்பார்கள். 'ராமாயண' மென்ற பதம் யோகரூடம். ஆகையால் வால்மீகியால் செய்யப்பட்ட காவ்யத்திற்கே பெயராயிற்று. 'கீதை, ஸூத்ர பாஷ்யம், மஹாபாஷ்யம், ராமன்,' என்ற பதங்களும் முறையே 'பகவத்கீதை, வ்யாஸர் செய்த ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம், பதஞ்ஜலி செய்த வ்யாகரண பாஷ்யம், தசரத புத்ரன்' இவைக்கே பெயராய் வழங்கி வருகின்றன.

II.

சதகோடி ராமாயணம்.

இது நூறு கோடி க்ரந்தங்களடங்கிய ராம சரிதம். இதை ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி, ப்ரஹ்மதேவரால அனுப்பப்பட்ட நாரதரிடமாக வேதவாக்ய ரூபமாய் உபதேசம் பெற்றுப் பிறகு தனதாச்ரமத்திற்கு வந்த ப்ரஹ்ம தேவரால், ராமசரிதத்தை நேரில் பார்த்து வர்ணிக்கக்கூடிய ஞானக்கண்பெற்று, அதினுதவியால் ராமாயணத்தை நூறு கோடி க்ரந்தங்களால் அமைத்தார்.—ஆனந்த ராமாயணம், மனோஹர காண்டம், 1; யாத்ரா காண்டம், 1; அத்புத ராமாயணம், 1.

ப்ரஹ்ம தேவர் ராமசரிதத்தை நூறு கோடி க்ரந்தங்களால் விஸ்தாரமாகச்செய்து அதை நாரதர் முதலிய மஹர்ஷிகளுக்குபதேசித்தார்.—கோவிந்த ராஜீயம்-துளஸீதாஸ ராமாயணம், பால காண்டம்.

இந்த ராமாயணத்தில் ஒன்பது லக்ஷம் காண்டங்களும், தொள்ளாயிரம் லக்ஷம் ஸர்க்கங்களும், நூறு கோடி ச்லோகங்களும் அடங்கியிருக்கின்றன.—ஆ-ரா, மனோஹரகாண்டம், 17.

"இந்த ஆதிகாவ்யத்தை மஹர்ஷிகள் மெச்சி அங்கீகரித்துத் தங்களாச்ரமங்களில பக்தியுடன் படிக்க வாரம்பித்தார்கள். அப்பொழுது தேவர்கள் ஆகாசத்தில விமானங்களில் கூட்டங் கூட்டமாக நின்று அதைக்கேட்டு ஆனந்த பரவசர்களாகப் புஷ்பங்களை வர்ஷித்து, க்ரந்த கர்த்தாவாகிய வால்மீகி மஹர்ஷியை 'ஜய ஜய' என்று வாழ்த்தினார்கள்.

பிறகு தேவகணங்கள் அந்த ராமாயணத்தைத் தங்களுலகத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்றும், தைத்யர்களும், நாகர்களும் பாதாளத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்றும் யத்னித்தார்கள். பூலோகத்து மஹர்ஷிகளும், அரசர்களும் ராமாயணத்தைத் தங்களுலகத்தைவிட்டு வெளியில் கொண்டுபோக ஸம்மதிக்கவில்லை. ஆகையால் அம்மூன்று கக்ஷிக்காரர்களுக்கும் கலஹம் நேர்ந்தது. அப்பொழுது பரமசிவனும் ப்ரஹ்மதேவரும், அவர்களுடன் திருப்பாற்கடல் சென்று இச்சண்டையைத் தீர்க்கும்படி மஹாவிஷ்ணுவை ப்ரார்த்தித்தார்கள்.

அவரும் ராமாயணத்தைப் பின்வருமாறு பிரித்து அவர்களை திருப்திசெய்தார். எப்படியெனில், அந்த நூறு கோடி க்ரந்தங்களையும் மூன்று பங்காக்கி, ஒவ்வொரு கக்ஷிக்காரர்களுக்கும் மூப்

பத்திமூன்று கோடி முப்பத்திமூன்று லக்ஷம் முப்பத்தி மூவாயிரம் முன்னூற்று முப்பத்திமூன்று க்ரந்தங்களும், 10 அக்ஷரங்களும் கொடுக்கப்பட்டன.

ஒவ்வொரு பாகத்திலுமுள்ள 10 அக்ஷரங்களடங்கிய மூன்று மந்த்ரங்களையும், லக்ஷ்மீ, ஆதிசேஷன், கருடன் இவர்களுக்கு உபதேசித்தார். லக்ஷ்மீதேவி தன்னுடைய மந்த்ரத்தை வைகுண்டம் கொண்டுபோய்த் தேவகணங்களுக்குபதேசித்தாள். ஆதிசேஷன் தன்னுடைய மந்க்ரத்தைப் பாதாள லோகம் கொண்டுபோய் நாகர் முதலியவர்களுக்குபதேசித்தார். கருடன் தன்னுடைய மந்த்ரத்தைப் பூலோகம் கொண்டுபோய் அவ்வுலகத்திலிருப்பவர்களுக்குபதேசித்தார். இம்மூன்று மந்த்ரங்களின் ஸ்வரூபத்தை மந்த்ர சாஸ்த்ரத்தைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டியது.

இப்படிப் பிரிக்கும்போது, பாக்கியான இரண்டு அக்ஷரங்களைப் பரமசிவன் தனக்குக் கொடுக்கும்படி ப்ரார்த்திக்க, ‘ராம’ என்னும் அந்த மந்த்ரத்தை அவருக்குபதேசித்தார். அந்த மந்த்ரத்தையே அவர் காசீ க்ஷேத்ரத்தில மரணமடையும் ப்ராணிகளுடைய வலது செவியில் தாரக மந்த்ரமாக உபதேசஞ் செய்து அவர்களைக் கரையேற்றுகிறார்.

பூலோகத்திற்குக் கொண்டுவரப்பட்ட 333,333,333 க்ரந்தங்களைப் புஷ்கரம், சாகம், ப்லக்ஷம், குசம், க்ரௌஞ்சம், சால்மலீ, ஜம்பூ என்னும் ஏழு த்வீபங்களுக்கும் ஸமமாகப் பிரித்தார். இப்படிப்பிரித்ததில ஒவ்வொரு த்வீபத்திற்கும் 47,619,047 ச்லோகங்கள் கிடைத்தன. நான்கு ச்லோகங்கள் மிகுந்தன. அவைகளைத் தன்னுடைய புத்ரனாகிய ப்ரஹ்மதேவன் ப்ரார்த்தித்ததின்பேரில் அவருக்கு உபதேசித்தார். அவர் அவைகளை நாரதருக்கு உபதேசித்தார். அந்த நான்கு ச்லோகங்களின் தாத்பர்யம் :—

“நானொருவனே ஜகத்துண்டாவதற்கு முன் இருந்தேன். ஸத், அஸத் இவைகளுக்குப் பரமான வேறொன்றுமில்லை. பிறகும் எது மீளுமோ அதுவே நான். தபஸ், தேஜஸ், இவைகள் போல் ஆத்மாவினிடம் எது தோன்றாதோ, விஷயத்தைவிட்டு வேறாக எது தோன்றுமோ அதுவே மாயை. பலவகையான சரீரங்களில் மஹாபூதங்கள் எப்படி அநுப்ரவேசம் செய்திருக்கின்றனவோ, அப்படி அவைகளில் நான் அநுப்ரவேசம் செய்யவில்லை. எது இருந்தால் ஸகல உலகமும் ப்ரகாசிக்கின்றதோ, எது இல்லாமற்போனால் ஸகல ஜகத்துமில்லாமல் போய்விடுமோ அதே பரதத்வம், பரமாத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள

விரும்பியவன் மேற்சொன்ன விஷயத்தைத் தெரிந்துகொண்டால் போதும்.''

க்ரந்தங்களில் புஷ்கர த்வீபத்திற்குக் கிடைத்த பாகமாகிய 47,619,047 ச்லோகங்கள் அதிலுள்ள இரண்டு வர்ஷங்களுக்கு ஸமமாய்ப் பிரித்துக்கொடுக்கப்பட்டன.

ஜம்பூ த்வீபத்திற்குக் கிடைத்த பாகமாகிய ச்லோகங்களை அதிலுள்ள குரு, ஹிரண்மயம், ரம்யகம், கேதுமாலம், இளாவிருதம், பத்ராச்வம், ஹரி, கிமபுருஷம், பாரதம் என்னும் ஒன்பது வர்ஷங்களுக்கும் ஸமமாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் 5,291,005 சலோகங்களும் ஏழு அக்ஷரங்களுள்ள மந்த்ரமும் கொடுக்கப்பட்டன. இப்படி ஒன்பதாகப் பிரித்ததில் பாக்கியான 'ஸ்ரீ' என்ற அக்ஷரம் ஒன்பது வர்ஷங்களுக்கும பொதுவாக ஏற்படுத்தப்பட்டது.

பின்பு காலாந்தரத்தில் பகவான் வ்யாஸரூபியாய அவதரித்துக் கலியுகத்தில் ப்ராஹ்மணர்கள மந்தபுத்தியுளளவர்களாயும் அல்பாயுஸ் உள்ளவாகளாயு மிருப்பாாகளென்று தெரிந்துகொண்டு, வேதத்தை ஜனங்களுடைய யோக்யதைககுத தககபடி அனேக சாகைகளாய்ப பிரித்தார். இதனாலேயே இவா வேதவ்யாஸரென்று பெயரடைந்தார். மேலும சதகோடி ராமாயணத்திலிருந்து பாரத வர்ஷத்துக்குக் கிடைத்த பாகத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டே 17 புராணங்களையும, உபபுராணங்களையும், மஹாபாரதமென்ற இதிஹாஸ ரத்னத்தையும செய்தார். அப்படியும் அவா மனது சாந்தியடையாமல் ஸரஸ்வதீ நதியின் கரையில் கவலையுடனிருக்கும்போது, நாரதமஹாிஷி அவரிடம் வந்து, முன்னமே ப்ரஹ்மதேவரிடம் தான் உபதேசம் பெற்றதும், சதகோடியைப் பிரிக்கும்போது மிகுந்ததுமான நான்கு சலோகங்களை யுபதேசித்தார். அவா அவைகளை யடைந்து சாநதமான மனஸுடையவராய், அவைகளினா தத்தைக்கொண்டே 18,000 க்ரந்தங்களடங்கிய பாகவத புராணத்தைச் செய்தாா.

பிற்காலத்தில் மஹரிஷிகளால் செய்யப்பட்ட வ்யாகரணம், ஜ்யோதிஷம், சிக்ஷை, சந்தஸ், கல்பம், நிருக்தம் ஆகிய வேதாங்கங்களும் பூமியில் வழங்கும் ஒவ்வொரு உபாக்யானமும் சதகோடி ராமாயணத்தையே ஆதாரமாகக்கொண்டவைகள்.—ஷை யாத்ரா காண்டம், 2.

இப்படியே பாரதமும் ஸம்க்ஷேபமாயும் விஸ்தாரமாயும் செய்யப்பட்டிருக்கிறது. முதலில் வ்யாஸபகவான் மஹாபாரதத்

தை 60 லக்ஷம் க்ரந்தங்களாகச் செய்தார். இதில் 30 லக்ஷம் க்ரந்தங்கள் தேவலோகத்தில் வைக்கப்பட்டன. பித்ரு லோகத்தில் 15 லக்ஷம் க்ரந்தங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ராக்ஷஸர்கள் யக்ஷர்களிடத்தில் 14 லக்ஷங்கள் ஒப்புவிக்கப்பட்டன. பாக்கி லக்ஷம் க்ரந்தங்கள். இவைகள்தான் பூலோகத்தில் வைசம்பாயன மஹர்ஷியால் ப்ரஸித்தப்படுத்தப்பட்டன. இது உபாக்யானங்கள் தவிர 24,000 க்ரந்தங்கள். இதன் சுருக்கம் 150 சலோகங்களால் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அனுக்ரமணிகை யென்று பெயர்.—மஹாபாரதம் ஆதிபர்வம், 1.

III.

ராமாயண கர்த்தா.

இதைச் செய்தவர் வால்மீகி மஹர்ஷி என்று ப்ரஸித்தம்.

'வாலமீகி' என்னும் பதத்திற்குப் 'புற்றிலிருந்து உண்டானவர்' என்று அர்த்தம். "புற்றிலிருந்து உண்டானபடியால் இவர் வால்மீகி யென்று சொல்லப்படுகிறார் என்று மிகவும் தேஜஸ்வியும் உலகத்திற்குப் பிதாமஹருமாகிய ப்ரஹ்மதேவர் சொன்னார்."—ப்ரஹ்ம கைவர்த்த புராணம்.

இவர் வருணனுடைய புத்ரர். "நான் வருணனுடைய பத்தாவது புத்ரன், அல்லது பத்தாவது தலைமுறை."—வால்மீகி ராமாயணம், 7, 96, 19. (தீர்த்தீய வ்யாக்யானம்.)

"ப்ரசேதஸினுடைய புதரன் ராமாயணத்தைச் செய்தார். அதை ப்ரஹ்மா அனுமதித்தார்."—ஷை 111. 10.

"இவர் வெகு காலம் தபஸ் செய்துகொண்டிருக்கையில் நாலுபக்கங்களிலும் புற்று வளர்ந்து அவரை மறைத்துக்கொண்டது. பிறகு வருணபகவான் கடுமையான மழை பெய்வித்து, அதனால் அந்தப் புற்றுக்கரைந்து இவர் வெளிப்பட்டதால் வருணனுடைய புத்ரனென்று பெயருண்டாயிற்று."— ஷை 1, 1, 1. (கோவிந்த ராஜீயம்.)

2. "இவர் வருணனுடைய புத்ரனை பிருகுவின் வம்சத்தில் உண்டானவர்."— ஷை 7, 94. 20. (தீர்த்தீயம்.)

"எவன் பிருகு வம்சத்தில் ரிக்ஷனென்னும் பெயருடன் பிறந்தானோ அவன் மேற்சொன்ன காரணத்தால் வால்மீகி யெனப்படுகிறான்."—விஷ்ணு புராணம். இவர் 24-வது சதுர்யுகத்தில் வேதவ்யாஸரா யிருந்தார்.—ஷை 3-3.

3. "இவர் வருணனுடைய புத்ரன்; ப்ருகுவின் ஸஹோத ரர்."—பாகவதம், 4, 1,

4. இவர் ப்ருகுகுலத்தில் பிறந்தப்ரசேதஸ் என்பவருடைய புத்ரன். இவருக்கு ரிக்ஷனென்று பெயர்.—வா-ரா-கா. 1, 1. 1. (கோவிந்தராஜீயம்.) இவர் இந்த்ர ஸபையிலிருக்கிறார்.—பார, ஸபாபர்வம், 7; வா-ரா. 7-71-11.

5. "பம்பாதீரத்தில் சங்கன் என்னும் ப்ராஹ்மணன் ஒருக்கால் கோதாவரி நதிக்கரையிலுள்ள அடர்ந்த காட்டில் ப்ர யாணஞ்செய்கையில், துஷ்ட ஸ்வபாவமுள்ள ஓர் வேடன் அவ ரை வழிமறித்து அவருடைய குண்டலங்கள் முதலிய ஆபரணங் களையும், கமண்டலுவையும், வஸ்த்ரங்களையும், பாதரக்ஷைகளை யும், அபஹரித்துக்கொண்டு சென்றான். அப்பொழுது வைகாசி மாஸமாகையால மத்யாஹ்ன காலத்தில் கடும் வெயிலால் தபிக கப்பட்டு ஒரு புல் தரையில் வஸ்த்ரத்தைப் போட்டு அதின்மேல நின்றுகொண்டு, ஹா! ஹா! வென்று அவர் அலறினார். அதைக கண்டு வேடன் "எனது தர்மமான திருட்டுத்தொழிலால் இவரு டைய வஸ்துக்களை அபஹரித்தது ந்யாயமே. ஆனாலும் என்னு டைய பழுதான பாதரக்ஷைகளை இவருக்குக் கொடுத்து கொஞ் சம் புண்யம் ஸம்பாதிக்கிறேன்" என்று நினைத்து அப்படியே கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்டு அந்த ப்ராஹ்மண னும் கஷ்டந்தீர்ந்து வேடனைப்பார்த்து, "நீ க்ஷேமமாய் இருக்கக் கடவாய். நீ பூர்வ ஜன்மத்தில செய்த புண்யத்தால் வைகாசி மா ஸத்தில் வெயில் காலத்தில் ப்ராஹ்மணனுக்குப் பாதரக்ஷ தா னம் செய்யவேண்டுமென்கிற நல்ல எண்ணம் உனக்கு உண்டா யிற்று" என்று சொன்னார். அப்பொழுது வேடன் "ஓ, ஸ்வாமி! என்னால் முன் ஜன்மத்தில் என்ன புண்யம் செய்யப்பட்டது?" என்று கேட்டான்.

அந்தப்ராஹ்மணன் வேடனை நோக்கி, "இவ்விடத்தில் நிழலு மில்லை, நீருமில்லை. ஆகையால வேறிடம்போய் ச்ரமத்தைத் தீர்த் துக்கொண்டு சொல்லுகிறேன்" என்று சொன்னார். உடனே வேடன் அவரைக் கொஞ்சதூரத்திலிருந்த ஏரிக்கரைக்கு அழைத்துப்போக, அவரும் அதில் ஸ்நானம் செய்து, மாத்யாஹ் னிகம், தேவ பூஜை முதலிய நித்யகர்மங்களை முடித்துக்கொண்டு வேடனால் கொண்டுவரப்பட்ட பழங்களைப் புஜித்து, பசி, தாஹம்,ச்ரமம் தீர்ந்து, ஓரிடத்தில் ஸுகமாக உட்கார்ந்து வேட னைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

"சாலமென்னும் நகரத்தில, ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் பிறந்த ஸ்தம்பன் என்று ஓர் ப்ராஹ்மணனிருந்தான். அவனுக்குக் காந்திமயீ என்ற மஹா பதிவ்ரதையான பார்யை யிருந்தாள். அவன தன்னுடைய வர்ணாச்ரம தர்மங்களை விட்டு, அவனுக்கிஷ்டமான தாஸியை வீட்டில் வைத்துக்கொண்டு, எப்பொழுதும் அவளிடத்திலேயே ஸுகித்துக்கொண்டிருந்தான். காந்திமயீ யென்பவள் தன்னுடைய பர்த்தா தன்னிடத்தில் கொஞ்சமேனும் ப்ரியமில்லாதவரா யிருந்தாலும், அவனுககும் அந்தத் தாஸிக்கும் ஸகல சுச்ரூஷைகளைச் செய்துகொண்டு எப்படியாவது அவனுடைய தயவை ஸம்பாதிக்க முயற்சி செய்தாள்.

சில காலத்திற்குப் பிறகு அவன் அபத்யமான ஆஹாரத்தைப் புஜித்து, அதினல் பவித்ரமென்னும் கொடிய ரோகமடைந்து, இரவும பகலும் ஸஹிக்கக்கூடாத உபத்ரவத்தை யனுபவித்து வந்தான். அப்பொழுது அந்தத் தாஸியானவள் அவனுடைய ஐச்வர்யம் முழுவதையும் அபஹரித்துக்கொண்டு வேறொருவனிடம் சென்றுள பிறகு அவன் தனக்கு ஒத்தாசை செய்ய ஒருவருமிலலாமல் தனது பத்னியை நோக்கி, "தேவி! நான் இதுவரையிலும் தாஸியிடத்தில் ஆசை வைததவனாய், உன்னைக் கவனிக்கவில்லை; உனக்கு யாதொரு உபகாரமும் செய்ததிலலை. எப்பொழுதும் உன்னைக் கடுமையான வார்த்தைகளாலும், க்ரூரமான செய்கைகளாலும் உபத்ரவித்து வந்தேன. பதிவ்ரதையான பார்யையை எந்தப் புருஷன் அலக்ஷ்யம் செய்து துககப்படுத்துகிறானே, அவன் பதினேழு ஜன்மங்கள் நபும்ஸகனாகப் பிறந்து ஸாதுக்களால் எப்பொழுதும் நிந்திக்கப் படுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் என்னைக் காப்பாற்ற உன்னைத் தவிர வேறொருவருமில்லை" என்று ப்ரார்த்தித்தான். அவளும் "ஓ, நாத! தாங்கள் அதைர்யப் படவேண்டாம். தாங்கள் என்னிடம் வெட்கப்படுவானேன்? தங்களிடத்தில் எனக்குக் கொஞ்சமாவது கோபமில்லை. முன் ஜன்மத்தில் நான் செய்த பாபங்களை நானே அனுபவிக்க வேண்டாமா? அப்படிச் செய்யாதவள் பதிவ்ரதையா?" என்று கை கூப்பி மிக வணக்கமாய்த் தெரிவித்தாள். பிறகு தனது தகப்பன் முதலிய பந்துக்களிடமிருந்து பணத்தை வாங்கி வந்து பர்த்தாவுக்குச் சுச்ரூஷை செய்து வந்தாள்.

இப்படி யிருக்கையில் வைகாசி மாஸத்தில் தேவலரென்னும் ஒரு மஹர்ஷி, கடும்வெயிலில் தபித்து இவர்கள் வீட்டிற்கு வந்தார். காந்திமயீ என்பவள் தனது பர்த்தாவை நோக்கி: "இவர்

வைத்யத்தில் தேர்ச்சியடைந்தவர்; இவருக்கு உபகாரஞ் செய்தால் உம்முடைய ரோகத்தை நீக்குவார்'' என்று சொல்ல, அவனும் அதற்கு ஸம்மதித்தான். தனது பர்த்தா கொஞ்சங்கூடத் தர்மசிந்தையில்லாதவனுகையால், இவ்விதமாக அவனை ஸம்மதிக்கச் செய்து, அந்த மஹர்ஷிக்கு அர்க்யம், பாத்யம், ஆசமநீயம், ஸ்நாநம, போஜனம், சந்தனம், பானகம், விசிறி முதலியவைகளைக் கொடுத்து விதிப்படி உபசரித்தாள். அவருடைய ஸ்ரீபாததீர்த்தத்தைப் பர்த்தாவிற்கு ப்ரோக்ஷித்து 'இது ஔஷதம்,' என்று உட்கொள்ளச் செய்தாள்.

இப்படிச்சிலகாலம் செல்ல, அவனுக்கு வ்யாதி அதிகரித்து, ஸன்னி பாதம் (ஜன்னி) கண்டபோது, சாந்திமயீ என்பவள் ஔஷதம் கொடுக்க யத்தனிக்கையில், பல்கிட்டி அவளுடைய விரலைத் துணடித்துக்கொண்டே அவன் உயிரை விட்டான்.

பின்பு அவள் தன் கைவளைகளை விற்றுச் சந்தனம், அகில் முதலிய சட்டைகளை வாங்கி, அதினுல சிதையடுக்கி, அதில் அவனைப் படுக்கவைத்து, அவள் அவயவங்களுடன் தனது அவயவங்களைச் சேர்த்து, உடன் கட்டையேறி, வைகுண்டலோகம் சேர்ந்தாள்.

அவன் சாகுந்தருணத்தில் தாஸியையே நினைத்துக்கொண்டு ப்ராணனை விட்டபடியால், வேடனுகப்பிறந்து எப்பொழுதும் ப்ராணிகளை ஹிம்ஸிக்கும்படி நேர்ந்தது. அந்தச் சங்கனென்பவன் நீதான். அந்தத் தாஸி இப்பொழுது வேடஜாதியில் பிறந்து உனக்குப் பத்னியாயிருக்கிருள். முன் ஜன்மத்தில் தேவலரென்னும் மஹர்ஷிக்குப் பானகம் கொடுக்கும்படி அனுமதி கொடுத்தபடியால், இப்பொழுது வைகாசி மாஸத்தில் கடும் வெயிலில் எனக்குப் பாதரக்ஷை கொடுக்க வேண்டுமென்கிற நல்ல புத்தி உனக்கு நேர்ந்தது. அவருடைய பாததீர்த்தத்தை ப்ரோக்ஷணம் செய்துகொண்டதால், இந்த வனத்தில் என்னைக்கண்டு என்னிடத்திலிருந்து உனது பூர்வஜன்ம விருத்தாந்தத்தைத் தெரிந்துகொள்ளும்படி நேர்ந்தது. உனது பார்யையின் விரலைக் கடித்துக்கொண்டு நீ ப்ராணனை விட்டதால், நீ இப்பொழுது மாம்ஸத்தையே புஜிக்கும்படியாயிற்று. படுக்கையில் ப்ராணனை விட்டபடியால், இந்த ஜன்மத்தில் எப்பொழுதும் பூமியில் படுக்கும்படி நேர்ந்தது. இனி உனக்கு நடக்கப்போகிறதையும் சொல்லுகிறேன்'' என்று அவனுடைய அடுத்த ஜன்மத்தின் விருத்தாந்தத்தையும், வைகாசி மாஸத்தில் செய்யவேண்டிய தர்மங்களையும் சொல்லி, அவனால் கொடுக்கப்பட்ட தனது குண்டலம் முதலிய வஸ்துக்

களைப் பெற்றுக்கொண்டு தனதிஷ்டப்படி சென்றார். அந்த வேடனும் அந்தத் தர்மங்களை ஆசரித்துக்கொண்டு அந்த ஜன்மத்தைக் கழித்தான்.

கிருஹுவென்னும் மஹர்ஷி ஓர் ஏரிக்கரையில் வெகுகாலம் தபஸ் செய்துகொண்டிருந்தார். அதன் முடிவில் அவருடைய கண்களிலிருந்து வீர்யமானது கீழே விழுந்தது. அதை ஒரு பெண் பாம்பு புஜிக்க அதன் வயிற்றில் இந்த வேடன் பிறந்தான். அவன் ப்ராஹ்மண ஜன்மமுள்ளவனானாலும், பால்யம் முதல் வேடர்களால் வளர்க்கப்பட்டபடியால், அவர்களுடைய ஆசாரத்தையே அனுஷ்டித்துச் சூத்ர ஸ்த்ரீயை விவாஹஞ் செய்துகொண்டு அவளிடத்தில் அநேகம் குழந்தைகளைப் பெற்றான். மேலும், திருடர்களுடன் சேர்ந்து, எல்லோரையும் ஹிம்ஸித்து அவர்களுடைய சொத்துக்களை அபஹரித்துப் பாப ஜீவனம் செய்து வந்தான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அந்தக் காட்டின் வழியாய் வந்த ஸப்தரிஷிகளை இந்த வேடன் வழிமறித்து "நான் பெரிய குடும்பமுள்ளவன்; என்னுடைய பெண்சாதி பிள்ளைகளைக் காப்பாற்ற இந்தத் தொழில் செய்கிறேன்; ஆகையால் தங்களிடமிருக்கும் வஸ்துக்களைக் கீழே வைத்துப்போகலாம்" என்றான். அப்பொழுது அந்த மஹர்ஷிகள் "நல்லது, அப்படியே செய்கிறோம். ஆனால் நீ உன் வீட்டிற்குப்போய்ப் பெண்சாதி பிள்ளைகளை 'உங்களைக் காப்பாற்றுவதற்காக நான் ஒவ்வொருநாளும் செய்கிற பாபத்தில் உங்களுக்கும் பாகமுண்டல்லவா?' என்று கேட்டு அவர்களுடைய அபிப்ராயத்தை அறிந்து வா. நீ வருகிற வரையில், நாங்களிவ்விடத்திலிருந்து அசைகிறதில்லை" என்று கோரமான ப்ரதிக்ஞை செய்தார்கள்.

அவனும் அப்படியே வீட்டிற்குச் சென்று அவர்களைக் கேட்க, அவர்கள் "நீ ஸம்பாதிக்கும் சொத்துக்களில் எங்களுக்குப் பாகமேயல்லாமல் நீ செய்யும் பாபங்களில் கொஞ்சங்கூட எங்களுக்கு ஸம்பந்தமில்லை" யென்றார்கள். அதைக்கேட்டுப் பயந்து, மஹர்ஷிகளுடைய தர்சனத்தால் சுத்தமான மனஸுடன், அவர்களிடத்தில் வந்து ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "நான் இதுவரையில் அக்ஞானத்தில் மூழ்கி என்னுடைய தர்மத்தைவிட்டு மஹா பாபத்தை ஸம்பாதித்துக்கொண்டேன். இப்பொழுது தங்களைச் சரணமடைகிறேன். எனக்கு வேறு கதியில்லை. என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான். அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் யோசித்து, "இவன் மஹா பாபி

ப்ராஹ்மணனுயிருந்தும் தன் தர்மத்தை விட்டு வேடனுனன். ஆயினும் இவன் நம்மைச் சரணமடைந்ததினுல் இவனைக் கைவிடக் கூடாது. ஆகையால் நாம் இவனுக்கு ஸகல பாபங்களையும் போக்கக்கூடிய மந்த்ரரத்னமாகிய ராமநாமத்தை மாற்றி உபதேசிப்போம்" என்று நிச்சயித்துக்கொண்டு, அவனைப் பார்த்து, "ஓ, ஸாதுவே! நாங்கள் இப்பொழுது உனக்குபதேசிக்கும் மந்த்ரத்தை ஜாக்ரதையாய்ப் பக்தியுடன் ஜபம் செய்துகொண்டு நாங்கள் திரும்பிவரும் வரையில் இவ்விடத்திலிருக்கவேண்டும" என்று ஆக்ஞாபித்து 'மரா.' வென்று உபதேசித்துச சென்றூர்கள். பின்பு அவன் அவர்கள் உத்திரவுப்படி அவ்விடத்திலேயே ஒரு தடியை அடையாளமாக நாட்டி எல்லா ஆசைகளையும் ஒழித்து, அதிபக்தியுடன் அதை ஜபித்துக்கொண்டிருந்தான்.

இப்படி அநேக ஆயிர வர்ஷங்கள் செலல, அவனைச சுற்றி ஒரு பெரிய புற்று வளர்ந்து மறைத்துக்கொண்டது. பிறகு ஸப்தாஷிகள் அவ்விடம் வந்து அவனை வெளியில வாவென்றழைக்க, அவனும புற்றிலிருந்து வெளிப்பட்டான். அபபொழுது அவர்கள் "ஓ மஹாஷியே! ராமநாமத்தின் மகிமையால ஸகல பாபங்களும் நீங்கி ப்ரஹ்மஞானியானீர். புற்றிலிருந்து வெளிப்பட்டதால உமக்கிது இரண்டாவது பிறப்பு. இனிமேல் உமக்கு லோகத்தில் வாலமீகி (புற்றின் பிள்ளை) என்று பெயர் வழங்கட்டும்" என்று அனுக்ரஹித்துச் சென்றூாகள்.

இவ்விதமாக வால்மீகி மஹாஷி தனது வரலாற்றை ராமனுக்குச் சொன்னூர்.—(ஆ-ரா-ராஜ்ய காண்டம், 14.)

வால்மீகி மஹாஷி, ஸ்ரீராமனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னூர். "நான் முந்தி வேடர்களிருக்குமிடத்தில் அவர்களுடன் வளர்ந்தேன். நான் ப்ராஹ்மணனுனலும் சூத்ரர்களுடைய ஆசாரத்தை எப்போதும் அனுஷ்டித்து வந்தேன். இந்த்ரியங்களுக்கு வசப்பட்ட எனக்கு சூத்ரஸ்த்ரீயினிடத்தில் அநேக புத்ரர்களுண்டானூர்கள். பின்பு நான் திருடர்களுடன் சேர்ந்து திருட்டுத்தொழிலைக்கைக்கொண்டேன். ஒவ்வொரு நாளும் வில்லையும் அம்பையுமெடுத்துக்கொண்டு யமனைப்போல ப்ராணிகளைக் கொன்று வந்தேன். இப்படியிருக்கையில் ஒரு நாள் ஒரு பெருங் காட்டில் ஸூர்யனைப்போலும் அக்னியைப்

போலும் ப்ரகாசிக்கும் ஸப்தர்ஷிகள் வரக்கண்டேன். அப்பொழுது அவர்களிட மிருக்கும் எல்லா வஸ்துக்களையும் பிடுங்கிக் கொள்ள விரும்பி, ‘நில, நில்’லென்று சொல்லிக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து போனேன். அந்த மஹர்ஷிகள், ‘ஓ, ப்ராஹ்மணாத்ம! எதற்காக எங்கள் பின்வருகிறாய்?’ என்று கேட்டார்கள். ‘ஓ, முனி சரேஷ்டாகளே! என்னுடைய மனைவி மக்கள் பசியால் வருந்துகிறாகள். அவர்களை ஸமாக்ஷிப்பதற்காக இந்த மலைக் காட்டில திரிந்துகொண்டிருக்கிறேன். தங்களிடமிருந்தேதேனும் அபஹரிக்க வந்தேன்.’’ என்று மறுமொழி சொன்னேன்.

அவர்கள, கொஞ்சமாவது பயப்படாமல் ‘நீ உன் குடும்பத்தாரிடம் போய் ஒவ்வொரு நாளும்உன்னால் செய்யப்படும் பாபங்கள் அவர்களுககுப் பங்குண்டா, இலலையா வென்று, தனித்தனியாயக் கேட்டுத் தெரிந்துவா. நீ வருகிறவரையில் நிசசயமாய் நாங்கள் இவ்விடததிலேயே இருக்கிறோம்’ என்றார்கள். மஹர்ஷிகள் சொலலியபடி வீட்டிற்குப்போய் மனைவி மக்களைக் கேட்டேன். அவர்கள, ‘நீ செய்யும் பாபம உன்னுடையதே. அதில் எங்களுக்குப் பாகமில்லை. நீ கொண்டுவரும் வஸ்துககளில் மாத்ரம் எங்களுககுப் பங்குண்டு’ என்றார்கள்.

அதைக்கேட்டு ஆலோசித்து, ஸமஸார வாழ்க்கையில் வெறுப்படைந்து, கிருபை நிறைந்த மனமுள்ள அந்த மஹர்ஷிகளிருக்குமிடம் போனேன். அவர்களைக் கண்டவுடன் அந்தஃகரண சுத்தி யுள்ளவனாய் ஆயுதங்களை எறிந்துவிட்டுப பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து ‘ஓ, முனிச்ரேஷ்டர்களே! மஹாபாபியான என்னைக் காப்பாற்றவேண்டும்’ என்று வேண்டிக்கொண்டேன். அவர்களும் ‘எழுந்திரு, எழுந்திரு, உனக்கு க்ஷேம முண்டாகட்டும். ஸாதுக்களின் சேர்க்கை க்ஷேமத்தைத் தரும்; உனக்கு ஒன்றை யுபதேசிககிறோம், அதனால் நீ முக்தியடைவாய்’ என்று சொல்லி, ‘இவன் கெடட நடைததையுள்ளவன்; ப்ராஹ்மணனானாலும் நீசன். ஸாதுக்கள் விலக்கக் கூடியவனே. ஆனாலும், நம்மைச சரணமடைந்தபடியால், மோக்ஷமார்க்கத்தை யுபதேசித்து எப்படியாவது காப்பாற்றவேண்டும்’ என்று ஒருவருக்கொருவர் யோசித்து நிச்சயம் செய்து கொண்டு, நம்முடைய திவ்ய

நாமத்தை மாற்றி, 'மரா' வென்று உபதேசித்து, அதை அவர்கள் திரும்பி வருகிறவரையில் ஜபிக்கும்படி ஆக்ஞாபித்துச் சென்றார்கள். நானு மப்படியே எல்லா ஆசையையு மொழித்து ஜபம் செய்ய, என்மேல் புற்று வளர்ந்தது. பின்பு வெகுகாலங் கழித்து அந்த மஹர்ஷிகள் வந்து என்னை வெளியில் வரும்படி அழைக்க, சீக்ரம் வெளியில் வந்தேன். அப்பொழுது அவர்கள், 'புற்றிலிருந்து வெளிப்பட்டபடியால் இது உனக்கு இரண்டாவது பிறப்பு; உனக்கு இனிமேல் வால்மீகி யென்று பெயர் வழங்கட்டும்' என்று அநுக்ரஹித்தார்கள்"—அத்யாத்ம ராமாயணம், 2-6. பவிஷ்யத்புராணம, 3-10.

பிருகுவும் வால்மீகியும் வருணனுக்கும் சர்ஷணிக்கும், பிறந்தார்கள்.—பாகவதம், 6, 18.

IV

வால்மீகி ராமாயண ச்லோகங்கள்.

24,000 ச்லோகங்களென்றே மூலத்தில சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவே கோவிந்தராஜரால வயாக்யானம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் கணக்கிட்டுப்பார்க்கையில 24,253 ச்லோகங்களிருக்கின்றன. கோவிந்தராஜீய வ்யாக்யானத்தில் இதற்குச் சில ஸமாதானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. ராமாயணம செய்து அநேக சதுர்யுகங்கள் சென்றபடியால், பாட பேதம், எழுதுகிறவர்களுடைய தவறுதல் முதலியவைகளால் ச்லோகக் கணக்கு மாறி இருக்கலாம்.

2. வால்மீகி மஹர்ஷி ராமாயணத்தை 24,000 ச்லோகங்களில் முடித்துவிடுவதாக முதலில உத்தேசித்தார். பின்பு செய்து முடிக்கும்போது அதிகரித்திருக்கலாம்.

3. 24,000 என்று சொன்னதிற்கு அதற்குக் குறையாமலிருக்கவேண்டியதென்று அர்த்தம்.

4. ப்ரஹ்மதேவருடைய பகலாகிய ஆயிரம் சதுர் யுகங்களின் பதினன்கிலொருபாகமாகிய 71 சதுர் யுகங்களுக்கு மேற்பட்ட மன்வந்தரத்தை 71 சதுர் யுகமென்று அமரஸிம்ஹன சொல்லியிருப்பதுபோல 24,000 த்திற்கு மேற்பட்ட ஸ்வல்பத் தொகையை லக்ஷ்யஞ் செய்யாமல, 24,000 மென்று சொல்லப்பட்டது.

ஆனால் இப்பொழுது காணப்படும் ச்லோகங்களின் தொகை அடியில் விவரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

காண்டங்கள்.	ஸர்க்கம்.	ச்லோகம்.
பால காண்டம்	77	2,255
அயோத்யா காண்டம்	119	4,415
ஆரண்ய காண்டம்	75	2,732
கிஷ்கிந்தா காண்டம்	67	2,620
ஸுந்தர காண்டம்	68	3,006
யுத்த காண்டம்	131	5,990
உத்தர காண்டம்	110	3,234
	647	2,4253

V.

ராமனுடைய காலம்.

"நான் த்ரேதாயுகமும் த்வாபரயுகமும் சேருகிற ஸந்த்யாம்சத்தில் தசரதருக்குப் புத்ரனாக ஸ்ரீராமனென்கிற திவ்ய நாமத்துடன் அவதரித்து உலகத்தைக் காப்பாற்றப் போகிறேன்" என்று பகவான் சொல்லியிருக்கிறார்.—பாரதம், சாந்திபர்வம், 339.

VI.

காவ்ய லக்ஷணம்.

லோகத்தில் "நாம் செய்யவேண்டிய கார்யம் இன்னது; இதைச் செய்தால் இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் ஸுகமடையலாம்; இதைச் செய்தால் மேற்கண்ட இரண்டுலகங்களிலும் கஷ்டப்படவேண்டும். இது விஹிதம், இது நிஷித்தம்," என்ற பகுத்தறிவு எல்லா ஜனங்களுக்குமிருக்கவேண்டியதென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம்.

அந்த அறிவு, வேதங்கள், புராணங்கள், காவ்யங்கள் இவைகளின் உண்மையான அர்த்தங்களைத் தெரிந்துகொள்வதால் உண்டாகும். மேற்சொல்லிய க்ரந்தங்களின் ஆராய்ச்சியால் தனித்தனியாய் உண்டாகும் அறிவும் ஒரே வகையானதுதான்; ஆனாலும், அவ்வறிவுண்டாகும் வகையில் ஸ்வல்ப பேதமிருக்கிறது. எப்படியென்றால், வேதமென்பது அரசனைப்போல சப்தத்தையே ப்ரதானமாயுடையது. அதிலுள்ள 'அக்னி' என்னும் பதத்

திற்குப்பதிலாய் அதே அர்த்தமுள்ள 'வஹ்னி' என்ற பதத்தை உச்சரிக்கக்கூடாது.

அப்படி உச்சரித்தால் குறித்த பலன் கிடைக்காது. மேலும் விபரீத பலனுண்டாகும். "மந்த்ரத்தை ஸ்வரத்திலாவது அக்ஷரத்திலாவது மாற்றி உச்சரித்து, அது குறைவடைந்தால், வேறு வகையாய் ப்ரயோகிக்கப்பட்டபடியால், உண்மையான அர்த்த முள்ளதாகாது. வஜ்ராயுதம்போல உச்சரித்தவனைக்கொலலும். ஸ்வரத்தை மாற்றி உச்சரித்த குற்றத்தால் இந்த்ரனைக் கொல்லக்கூடியவனைப் பிறக்காமல் இந்த்ரனால் கொல்லக்கூடியவனாக உண்டானான்.''—ச்ருதி.

இப்படி வேதத்தில் சொல்லிய சில விதிகளுக்குக் குறிப்பிட்டு இன்னது பலமென்று தெரிந்துகொள்ளாவிடினும், அவைகளைச் செய்யவேண்டும். செய்யாவிடில் ப்ரத்யவாயம (பாபம்) சேரிடும். அரசன் கட்டளையை ப்ரயோஜனத்தை விசாரியாமலேயே செய்து தீரவேண்டும். இல்லாவிடில் சிக்ஷிப்பானல்லவா? ஆகையால் வேதத்தை அத்யயனஞ் செய்து, இது செய்யலாம், இது செய்யக்கூடாதென்று தெரிந்துகொண்டு, விஹித கார்யத்தில ப்ரவிருத்தியும். நிஷித்த கார்யத்திலிருந்து நிவிருத்தியும் பயத்தை முன்னிட்டு உண்டாகின்றன.

புராணமானது வேதம்போல் இதைச் செய், இதைச செய்யாதே என்று விதி, நிஷேதம் செய்கிறதில்லை. ஆனால் மித்ரன் போல் நல்ல கார்யங்களைச் செய்து க்ஷேமமடைந்தவர்களையும், கெட்ட கார்யங்களைச் செய்து கெடுதியடைந்தவர்களையும் கதைகளால் வர்ணித்து, அதைக் கேட்பதினாலேயே "நாம் ராமன் முதலியவர்களைப்போல நடக்கவேண்டும். ராவணன் முதலியவர்களைப் போலிருக்கக்கூடாது" என்றறிவுண்டாகும்படி செய்கிறது. ஆகையால் வேதத்தால் பயத்தை முன்னிட்டு உண்டாகும் அறிவைவிடப் புராணத்தாலுண்டாகும் அறிவு மேலானது.

காவ்யமானது ஸ்த்ரீகளுக்கு ஸமம். ஸ்த்ரீகள் எப்படித் தங்களிஷ்டத்தை வார்த்தையால் வெளியிடாமலே இன்னதென்று தெரிந்து நடக்கும்படி காமியான புருஷனைச் செய்கிறார்களோ, அப்படியே காவ்யமும் வாச்யார்த்தத்திற்கு மேற்பட்ட வஸ்து, அலங்கார ரூபமான வ்யங்க்யம் என்ற அர்த்தங்களால் பிறருடைய மனதை இழுக்கிறது. அபிமானிகளும் இதனால் என்ன த்வனிக்கிறது? கவியின் தாத்பர்யம் எதிலிருக்கிறதென்று வாச்யத்தைவிட மேலான அர்த்தத்தை ஆசையுடன் தேடி ஸம்பா

நித்து ஆனந்திக்கிறார்கள். ஆகையால் காவ்யத்தினுல் உண்டா கும் ஞானம் மிகவும் மேலானது.

காவ்யம் கொஞ்சமாவது தோஷமில்லாமலும், குணங்களுள் ளதும், அலங்காரங்களுள்ளதுமான சப்தார்த்தங்கள்.

'கவியின் கார்யம்' என்றபடி, சிருங்காரம் முதலிய ரஸ பூர் ணமான சப்தச்சேர்க்கை என்று ஏற்படும்.

இது மூன்று வகையுள்ளது.

1. கத்ய காவ்யம்=காதம்பரீ முதலியவை.

2. பத்யகாவ்யம்=ரகுவம்சம் முதலியவை.

3. சம்பூ=கத்யமும் பத்யமும் சேர்ந்தவை.

லோகத்தில் ஜனங்கள் ஸுகத்தை யனுபவிப்பதற்காக அநே கம் ஸாமக்ரீகள் ஏற்பட்டிருப்பதுபோலக் காவ்யத்திலும் அவ்வ ளவு ஸாமக்ரீகளிருக்கின்றன. சப்தம், அர்த்தம், இவைகள் காவ்யத்திற்குச சரீரம்; வ்யங்க்யார்த்தமே ப்ராணன்; உபமை முதலிய அலங்காரங்கள் முத்துமாலை, கடுக்கன், வளை முதலிய வைகளைப்போல, ஆபரணங்களாயிருக்கின்றன; ச்லேஷை முதலி யவைகள், சௌர்யம் முதலிய குணங்களைப் போலிருக்கின்றன; வைதர்பீ முதலிய ரீதிகள் ஜாதிக்குரிய ஸ்வபாவங்களைப்போல் மேன்மையுண்டு பண்ணுகின்றன; கைசிகீ முதலிய விருத்திகள் நடத்தையைப்போல் காவ்ய சரீரத்திற்கு அழகை யுண்டுபண்ணு கின்றன; பதங்கள் மாறுமல் ஒன்றோடொன்று சேர்ந்திருப்ப தாகிற சய்யை, படுக்கையைப்போல் ஸுகத்தை யுண்டுபண்ணு கின்றது. பதார்த்தங்களின் ரஸத்தை யனுபவிப்பதற்கு உஷ்ண ஸம்பந்தம் (பாகம்) எப்படி அவச்யமோ அப்படி த்ராக்ஷாபாகம் முதலியவைகள். இந்த ஸாமக்ரீகளால் காவ்யம் ப்ரகாசிக்கிறது.

சப்தம் மூன்றுவகை :—1. வாசகம் 2. லக்ஷகம். 3. வ்யஞ்ச கம்.

அர்த்தம் மூன்றுவகை:—வாச்யம். பதங்களுக்கு நிகண்டு முதலியவைகளால ஏற்படக்கூடியது. இந்தப் பதத்தால் இந்த அர்த்தம் தோன்றட்டுமென்ற பகவானுடைய ஸங்கேதரூப சக்தி யுள்ளது.

2. லக்ஷ்யம். வாச்யார்த்தம் ஒவ்வாத விடத்தில் அதன் ஸம்பந்தமுள்ள வேறு அர்த்தம்.

3. வ்யங்க்யம். பதங்களுடைய அர்த்தங்கள் ஒன்றோடொ ன்று அந்வயித்த பிறகு வாக்யத்தி னர்த்தமுண்டாய் அதை

அலங்கரிப்பதற்காக அதனால் தோற்றுகிற வேறு அர்த்தம்; இதையே 'த்வனி' யென்றும சொல்வதுண்டு.

அலங்காரம். உபமா முதலியவைகள் முக்யமாய் நூறு. காவ்யத்திற்கு அழகை யுண்டுபண்ணுகிறவைகள். (சமத்காரமான சொற்கள்.)

குணங்கள். இவை பதச்சேர்க்கையைச் சார்ந்து, காவ்யத்திற்கு அழகை யுண்டுபண்ணக் கூடியவை; 'ச்லேஷை' முதல் 'கதி' உள்பட 24.

ரீதி. குணமுள்ள பதச்சேர்க்கையே; சப்தத்தை மாத்ரம் ஒட்டியது. இது மூன்றுவகை:—1. வைதர்ப்பீ, 2. கௌடீ, 3. பாஞ்சாலீ.

வைதர்பபீ. கடுமையான ஸந்திகளும், கடுமையான அக்ஷரங்களும், மிகவும் நீண்ட ஸமாஸங்களு மிலலாமை.

கௌடீ. கடின அக்ஷரங்களும் நீண்ட ஸமாஸங்களு முள்ளது.

பாஞ்சாலீ. மேற் சொல்லிய இரண்டும் கலந்திருப்பது.

விருத்தி. அந்தந்த ரஸத்திற்குத தக்கபடி உசிதமான அர்த்தத்தின் வ்யாபாரம். சப்தத்தின் சேர்க்கை (ரசனை)யும் ரஸத்திற் தக்கபடியே இருக்கும். இவை நான்கு வகை:—

1. கைசிகீ, 2 ஆரபடீ, 3. ஸாத்வதீ, 4. பாரதீ.

கைசிகீ. மிகவும் அழகான அர்த்த ஸந்தர்ப்பம். இதற்கு சிருங்காரம், கருணை, இந்த ரஸங்களே உரியவை.

ஆரபடீ: அதிக அழகில்லாத ஹாஸ்யம், சாந்தம், அத்புதம், என்ற ரஸங்களை அவைகளுக்குத் தகுந்த சப்தங்களால் வர்ணிப்பது.

ஸாத்வதீ: வீரம், பயாநகம் என்ற ரஸங்களை மேற்கண்டபடி அவைகளுக்குத் தககபடி வர்ணிப்பது.

பாரதீ: ரௌத்ரம், பீபத்ஸம் என்ற ரஸங்களை, மிகக்கடுமையாய் வர்ணிப்பது.

சய்யா: தாரான் வயமில்லாமல், பதங்களை ஒன்றேடொன்று சேர்த்து இழைத்திருப்பது.

பாகம். உலகத்தில் ஒவ்வொரு வஸ்துக்களின் ரஸத்தை யநுபவிக்கவேண்டுமானால் பாகமில்லாமல் முடியாது. அது ஒருவகையான உஷ்ணத்தின் சேர்க்கையே. மாங்காய் முதலிய

வைகளை வைக்கோல் முதலியவைகளில் வைத்து உஷ்ணத்தை யுண்டுபண்ணினால், காயிலிருந்த ரஸம் மாறி இனிமையான ரஸம் உண்டாகிறதல்லவா?

அதுபோல் காவ்யத்தில், சிருங்காரம் முதலிய ரஸங்கள் மன திற்கு ஸுகத்தைக்கொடுக்கும்படி வர்ணிக்கப்படுவதான காம் பீர்யமே, பாகமென்னப்படும். இது முக்யமாய் இரண்டு வகை:— த்ராக்ஷாபாகம், நாளிகேரபாகம்.

த்ராக்ஷா பாகம்: த்ராக்ஷாபலம் வாயில் போட்ட மாத்ரத் திலும் கடித்தமாத்ரத்திலும ரஸத்தைக் கொடுப்பதுபோலப் படிக்கும் காலத்திலும், அர்த்தானு ஸந்தானத்திலும, சிருங்கா ரம் முதலிய ரஸங்கள் ப்ரகாசிப்பது.

நாளிகேர பாகம்: தேங்காயின் மட்டை ஓடுகளை ச்ரமப்பட் டுப் பிரித்து, உள்ளிருக்கும் கடினமான பருப்பையெடுத்து, அதையும கடித்த பிறகே அதன் ரஸத்தை யனுபவிப்பதுபோலப் படித்தவுடனே அர்த்தம் வெளிப்படாமல் கொஞ்சம் ச்ரமப்பட்ட பிறகே ரஸத்தைத தெரிந்துகொள்ளும்படி யிருப்பது. த்ராக்ஷா பாகம் மிகவும லேசானது. நாளிகேரபாகம் மிகவும் கடினமா னது. இவ்விரண்டிற்கும் நடுவில், மதுபாகம், க்ஷீரபாகம், கதளீ பாகம் முதலியவைகளுமுண்டு.

காவ்யவிபாகம். உத்தமம், மத்யமம், அதமம் என்று காவ்ய ஙகள் மூன்று வகை.

மத்யமம்: இதில் வாச்யமான அர்த்தம் ப்ரதானமாயும், வ்யங்க்யார்த்தம அதற்கு அங்கமாயு மிருக்கும்.

அதமம்: இதில வ்யங்க்யார்த்தமே ப்ரகாசியாமல், சப்தம், வாச்யார்த்தம் இவைகளுடைய அழகு மாத்ரமிருக்கும். இதற்குச் 'சித்ரம்,' என்றும் பெயருண்டு.

உத்தமம்: இதில் வாச்யார்த்தத்தை அலங்கரித்துக்கொ ண்டு வ்யங்க்யம ப்ரதானமாக விருக்கும். மேலும், பட்டணம் ஸமுத்ரம், மலை, ருதுக்கள், சந்த்ரோதயம், ஸூர்யோதயம், உத் யான விளையாட்டு, ஜலக்ரீடை, மதுபானம், ரதி, பிரிதல், விவா ஹம், புத்ரோத்பத்தி, ஆலோசனை, சொக்கட்டான் விளையாடு தல், ப்ரயாணம், யுத்தம், நாயகனுடைய க்ஷேமம் இவைகள் ஏறக் குறைய ஸர்க்கக் கணக்காக வர்ணிக்கப்பட்டும்; ரஸங்கள், பாவங் கள் நிறைந்தும்; ஸர்க்கங்கள் அதிக விஸ்தாரமில்லாமலும்; அதிலுள்ள விருத்தங்கள் கேட்பதற்கு இனிமையானவைகளா

யும், நல்ல பதச்சேர்க்கையுள்ளவைகளாயும்; ஒவ்வொரு ஸர்க்கத்தின் முடிவில் வெவ்வேறு விருத்தங்களமைத்துமிருக்கவேண்டும். இதே மஹாகாவ்யம். மேற்சொல்லிய உத்தம காவ்ய லக்ஷணங்கள் யாவும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் பொருந்தியிருக்கின்றன.

காவ்ய ப்ரயோஜனம். இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஸுகத்தைக் கொடுக்கும். "கீர்த்தி, தனம், வ்யவஹாரஞானம், கெடுதியைத் தடுப்பது, பிறருக்கு உடனே ஸுகத்தை யுண்டுபண்ணுவது, ஸ்த்ரீபோல உபதேசம் பண்ணுவது என்றவைகளுக்குக் காவ்யம் உபயோகப்படுகிறது.":—காவ்யப்ரகாசம்.

"விசேஷ ஞான விருத்தியும் கீர்த்தியுமுண்டாகின்றன. குணங்கள் பரவுகின்றன; உத்தம புருஷனுடைய சரிதம் வர்ணிக்கப்படுகிறது; ஆகையால் காவ்யங்கள் ஏன் மனதை அபஹரிக்காது? பாபத்தைப போக்கடிக்காது? பாப நிவா்த்தமாயும் மனோஹரமாயு மிருக்கும்.":—போஜமஹாராஜன்.

மஹாகாவ்யம். எவனுடைய பெயரை உச்சரிப்பதினாலும் நினைப்பதினாலும் பாபங்கள் விலகுமோ, ஸகல க்ஷேமங்களும கிடைக்குமோ, அவனே புண்யச்லோகன் எனப்படுவான். அப்படிப்பட்ட உத்தம நாயகனுடைய சரிதத்தை வர்ணிக்கவேண்டும். "நாயகனுடைய மஹிமையால காவ்ய ஸம்பத ப்ரகாசிக்கின்றது.":—பாமஹாசார்யா.

"குணங்கள், அலங்காரங்கள் முதலியவைகளால காவ்யம் அலங்கரிக்கப்பட்டிருந்தாலும, உத்தம நாயகனுடைய சரிதவர்ணன மிருந்தால் மாத்ரம் மேருபாவத்தால் கலபகவிருக்ஷம போல் மிகவும் ப்ரகாசிக்கும்.":—உத்படாசார்யா.

"உதாரனாகிய நாயகனுடைய சரிதவர்ணனமே க்ரந்த ப்ரதிஷ்டைக்குக் காரணம்.":—ருத்ரபட்டர்.

"நாயகனுடைய குணங்களாகிய நூலில் கோர்க்கப்பட்ட கவியின் நல்வார்த்தைகளாகிய ரத்னமாலைகள் வித்வான்களாகிற புண்யசாலிகளுக்குக் கல்பகாலம் வரையில் ஆபரணமாகின்றன" ஸாஹித்ய மீமாம்ஸா.

"கவியானவன் ஸ்வல்ப வாக்விலாஸ முள்ளவனானாலும், உலகத்தில் மேலான குணசாலியான நாயகனை வர்ணித்திருந்தால் அதை வித்வான்கள் செவிகொடுத்துக் கேட்பார்கள்.":—போஜமஹாராஜன்.

உத்தம புருஷனுடைய வர்ணனமிருந்தால் மாத்ரம் காவ்யம் வித்வான்களாலாதரிக்கப்படும். உதாஹரணம்: 1. மஹாபாரதத்தில் மஹாபுருஷனாகிய கிருஷ்ண பரமாத்மா வர்ணிக்கப்பட்டிருக்கிறார்.

தர்க்கம். இது ஈசவரன் ஸர்வஜகத்திற்கும் காரணராயிருக்கிறாரென்பதற்குத் தகுந்த அனுமானப்ரமாணத்தைக் குறிப்பிடுவதால் மஹா புருஷவர்ணனத்தில் உபயோகப்படுகிறது.

மீமாம்ஸா. இது பலவித ந்யாயங்களை நிரூபிக்கும் சாஸ்த்ரம். இது "வேதங்களை அத்யயனஞ் செய்த பிறகு அவைகளில் சொல்லிய தர்மங்களை யறிய விரும்பவேண்டும்" என்று ஆரம்பித்திருக்கிறபடியால், புருஷனிடமிருக்கும் குணங்களை வர்ணிப்பதே இதன் கருத்தென்று விளங்குகிறது. வேதாந்தத்திற்கு மிகவும் உபயோகமானது.

வேதாந்தம். பரப்ரஹ்மத்தின் குணங்களை வர்ணிப்பதினாலேயே இது எல்லாராலும் ஆதரிக்கப்பட்டு வருகிறது.

ஆக்ஷேபம். ப்ரஹ்மத்திற்குக் குணங்களிருப்பதாய் ஒப்புக்கொள்ளாத அத்வைத மதரீதியாய் வேதாந்த சாஸ்த்ரம் ப்ரஹ்மத்தின் குணங்களை வர்ணிக்கிறதென்று எப்படி சொல்லக்கூடும்?

ஸமாதானம். நிர்க்குணச்ருதியை அனுஸரித்து ப்ரஹ்மத்திற்குக் குணங்கள் ஒப்புக்கொள்ளாவிடினும் "தோஷமில்லாமலிருப்பதே குணமென்றுசொல்லக்கூடும்." அல்லது உபாதி ஸம்பந்தத்தால் குணங்களுண்டென்று சொல்லக்கூடும்.

ஆகையால சாஸ்த்ரங்களும, புராணங்களும், மஹா புருஷனுடைய குணவர்ணனமுள்ளவைகளாயிருந்தால மாத்ரம் வித்வான்களால் ஆதரிக்கப்பட்டு வெகுகாலம் ஜீவித்திருக்கும்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் எல்லோராலும் ஆதரிக்கப்பட்டு நீண்டகாலமாய வழங்கி வருவதற்கும், அதைச் செய்த வால்மீகி மஹர்ஷிககு மேலான ப்ரதிஷ்டை ஏற்படுவதற்கும், லோகோத்தரனாகிய ராமனுடைய சரித்ரத்தை வர்ணித்திருப்பதே காரணம்.* கதாநாயகனான ராமன், தீரோதாத்தன், புண்யச்லோகன், ஸகல கல்யாண குணங்கள் பொருந்தியவன். "எவன் ராமனைப் பார்க்கவில்லையோ, எவனை ராமன் பார்க்கவில்லையோ, அவன் உலகத்தாரால் நிந்திக்கப்படுவதுடன், அவனுடைய ஆத்மாவும் அவனை நிந்திக்கிறது." வா-ரா. II, 17-14.

மேற் சொல்லிய குணங்களில்லாத காவ்யம் படிக்கத்தகுந்ததல்ல.

நாயகன். கீர்த்தி, ப்ரதாபம் இவைகளுள்ளவனும், தர்மம், அர்த்தம், காமம், இவைகளில் ஆசையுள்ளவனும், கார்யபாரத்தை வஹிப்பவனும் நாயககுணங்களுள்ளவனும், க்ரந்தத்தில் வர்ணிக்கப்படும் முக்ய பலத்தை யடைகிறவனுமாயிருப்பவன்

நாயக குணங்கள். முக்யமாய் 10.

1. மேலான குலத்தில் பிறந்திருப்பது. வா-ரா. II, 1-21.

2. நான்குவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்படாதபோதும் அலங்கரிக்கப்பட்டாற்போல் ப்ரகாசிக்கும் சரீரமுள்ளவனாயிருப்பது.

3. மஹாபாக்யம். ஸார்வபௌமனாயிருப்பது.

4. ஔதார்யம். விசேஷமாய்க் கொடுக்கும் ஸ்வபாவம்.

5. தேஜஸ்விதா. உலகத்தை ப்ரகாசிக்கச் செய்பவனாயிருப்பது.

6. வைதக்த்யம். கார்யங்களைத் தேச காலங்களுக்குத் தக்கபடி செய்யும் ஸாமர்த்யம்.

7. தார்மிகத்வம். தர்மத்திலேயே நோக்கமுள்ளவனாயிருப்பது. ஷை II, 2-28.

8. மஹாமஹிமத்வம் தெய்வப் பிறப்பாயிருப்பது. ஷை II, 1-7.

9. பாண்டித்யம். எல்லாவித்யைகளிலும் மேலானவனாயிருப்பது. ஷை II, 2-33.

10. வினீதத்வம் மிகவும் வணக்கமுள்ளவனாயிருப்பது.

நாயகபேதங்கள். நான்கு வகை: 1. தீரோதாத்தன், 2. தீரோத்ததன், 3. தீரசாந்தன், 4. தீரலலிதன்.

தீரோதாத்தன். கோபம் முதலியவைகளால் மாற்றப்படாத அந்தக்கரணமுள்ளவன்; மனஸ் விகாரமடைவதற்குக் காரணமிருக்குங் காலத்திலும் அபிப்ராயத்தை வெளியிடாதவன்; பிறருடைய கஷ்டத்தை நிவர்த்திக்கும் ஸ்வபாவமுள்ளவன்; ஆத்ம ஸ்தோத்ரம் செய்துகொள்ளாதவன்; சாஸ்த்ரங்களைப் படித்து அவைகளையே கண்ணாய் வைத்துக்கொண்டிருப்பவன்; வீரரஸத்தையே ப்ரதானமாயுள்ளவன்.

தீரோத்ததன். மதம், மாத்ஸர்யம், அதிகமாயுள்ளவன்; கடுமையான நடத்தையுள்ளவன்; தன்னைத்தானே மெச்சிக்கொள்ளுகிறவன்; இல்லாத வஸ்துக்களை வித்யா பலத்தினால் காண்பிக்

கும் மனோபலமுள்ளவன்; ஸ்வல்பகாரணத்தினால் கோபிப்பவன்; ரௌத்ர ரஸத்தையே முக்யமாயுள்ளவன்.

தீரசாந்தன். கஷ்டத்தைப் பொறுப்பவன்; பொறுமையுள்ளவன்; எப்பொழுதும் ஸந்தோஷமான சித்தமுள்ளவன்; சாந்த ரஸத்தையே முக்யமாயுள்ளவன். இவன் பெரும்பாலும் ப்ராஹ்மணனாயிருப்பான்.

தீரலலிதன். புத்ரன், மந்திரி முதலியவர்களிடத்தில் யோக க்ஷேமத்தை ஒப்புவித்துக் கவலையில்லாமலிருப்பவன்; பாட்டு முதலியவைகளில் ஆசையுள்ளவன்; ஸுகத்தையே தேடுகிறவன். சிருங்கார ரஸத்தை ப்ரதானமாயுடையவன்.

ரஸங்கள் "விபாவம், அனுபாவம், ஸாத்விகம், வ்யபிசாரி, என்ற ஸாமக்ரிகளால் அனுபவிக்கத்தக்கதாய்ச் செய்யப்பட்ட (ஸ்தாயீபாவம்) மனோவிகார விசேஷம்." தசரூபகம்.

விபாவம். இருவகை: ஆலம்பனம், உத்தீபனம்.

ஆலம்பனம். யௌவனம் அழகு முதலியவை.

உத்தீபனம். தென்றல் காற்று, சந்த்ரிகை, முதலியவை— வா-ரா. IV. 1-90-100.

அனுபாவம். ஸ்த்ரீகளுடைய கடைக்கண் பார்வை, புருவ மசைதல் முதலியவை.

ஸாத்விகம். தன்னை மறந்து அன்யனுடைய நினைத்து அவர்களுடைய ஸுக துக்கத்தைத் தான் அனுபவிப்பதாய் நினைப்பதால் உண்டாகும விகாரவிசேஷங்கள்; இவை எட்டுவகை.

வ்யபிசாரி. இவைகளுக்கு ஸஞ்சாரி என்றும் சொல்வதுண்டு. இவை வெறுப்பு முதல் யோசனை வரையில் 32 வகை.

ரஸவிசேஷங்கள். 1. சிருங்காரம், 2. ஹாஸ்யம், 3. கருணை, 4. ரௌத்ரம, 5. வீரம், 6. பயாநகம், 7. பீபத்ஸம், 8. அத்புதம், 9. சாந்தம்.

ரஸமுண்டாகும் வழி. புருஷனுக்கு ஸ்த்ரீ விஷயமாகவாவது, ஸ்த்ரீக்குப் புருஷ விஷயமாகவாவது அந்தந்த ரஸத்திற்கு அனுகுணமாக விகாரமற்ற தன் மனதில் உண்டாகும் விகார விசேஷத்திற்கு ஸ்தாயீ பாவமென்பார்கள்; அது ரஸத்திற்குத் தக்கபடி வெவ்வேறாக விருக்கும். அது ரஸமாக ஆகும் வரையில் மற்ற ரஸங்களால் மறைக்கப்படாமலிருந்து, விபாவம் முதலிய மேற்காட்டிய ஸாமக்ரீகளால் பருத்து, ரஸமாக மாறும். அந்த ரஸத்தை யனுபவிக்கும்பொழுது தன்னையும் மற்ற பதார்த்தங்களையும் மறந்துவிடுவான்.

ஒவ்வொன்றிலும் முக்யமான பேதங்கள் மாத்ரம் காட்டப் பட்டிருக்கிறது. முழுமையும் அறிய விரும்புவோர்கள் ' தசரூபகம் ' முதலிய ஸாஹித்ய க்ரந்தங்களைக் கொண்டு தெரிந்துகொள்ளவும்.

சிருங்காரம், வீரம், ரௌத்ரம், அத்புதம், சாந்தம் இந்த ஐந்து ரஸங்களும் லோகத்தில் மிகவும் மேலான நாயகனுடைய வர்ணனையில் உபயோகித்திருந்தால் மிகவும் அழகாயிருக்கும்.

ரஸாபாஸம். இந்த ஒன்பது ரஸங்களும் அந்தந்த ரஸத்திற்குத் தகுந்த நாயகவிஷயமாய் வர்ணிக்கப்படாமலிருந்தாலும், நாயகன் நாயகி, இவர்களுக்குள் யாருக்காவது ஒருவருக்கு மாத்ரம ஆசையிருந்து மற்றவர்களுக்கு ஆசையில்லாமற்போனாலும், நாயகிக்கு மாத்ரம் அதிக ஆசையிருக்குமானாலும், பசு, பக்ஷி, ம்லேச்சன் இவர்கள் விஷயமாய வர்ணிக்கப்படடாலும், அது ரஸம்போல் தோன்றுமே யல்லாது ரஸமாகாது.

இந்தக் காவ்யத்தில் சிருங்காரமுதலிய ஒன்பது ரஸங்களும் வாணிக்கப்பட்டிருக்கின்றன. ராமன் ஸீதையை விவாஹம் செய்துகொண்டு அவளைவிட்டுப் பிரியும் வரையில், ஸம்போக சிருங்காரமும், பிறகு விப்ரலமப சிருங்காரமும், சூர்ப்பனகையின் விருத்தாந்தத்தால் ஹாஸ்யரஸமும்; ராமனை விட்டுப் பிரிந்த தசரதனுடைய சரித்திரத்தால் கருணை ரஸமும்; லக்ஷ்மணருடைய சரிதத்தால் வீரரஸமும்; ராவணன் முதலியவர்களுடைய சரிதத்தால் ரௌத்ர ரஸமும், மாரீசன் முதலியவர்களின் கதையால் பயானகம் என்னும் ரஸமும்; கபந்தன், விராதன் முதலியவர்களுடைய கதையால் பீபத்ஸ ரஸமும்; ராவணன் முதலியவர்களுடைய யுத்தங்களில் நேரும் ஆச்சரியகரமான வார்த்தைகளாலும், செய்கைகளாலும், அத்புத ரஸமும்; சபரியின் கதையால் சாந்த ரஸமும், வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் சிருங்கார ரஸமே இந்தக் காவ்யத்தில் ப்ரதானம். மற்றவை அதற்கு அங்கம். சிலர் இதற்குப் 'பௌலஸ்த்யவத' மென்று பெயரிருப்பதால் வீரரஸமே ப்ரதானமென்றும், மற்றவை அதற்கு அங்கங்களென்றும் சொல்லுகிறார்கள். சிலர் இதற்கு ' ஸீதா சரித ' மென்று பெயரிருப்பதால் சோகரஸமே ப்ரதானமென்றும், அதற்கு மற்றவை அங்கங்களென்றும் சொல்வாாகள்.

நாயகீ. நாயகனுக்குச் சொல்லிய குணங்களில் ஸ்த்ரீகளுக்கும் பொதுவாயிருக்கும் குணங்கள் நாயகிக்கிருக்கவேண்டும். மேலும் அவளுடைய பெயரைச் சொன்னமாத்திரத்தில் புண்யம்

ஸித்திக்கக் கூடியதா யிருக்கவேண்டும். எல்லோராலும் புகழக் கூடியவர்களாயிருக்கவேண்டும். நாயகி பேதங்களேயும் லக்ஷண ங்களேயும் தசரூபகம் முதலிய ஸாஹித்ய க்ரந்தங்களேக்கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

VII.

புருஷார்த்தங்களுடைய விவரணம்.

"தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமிவைகளுடைய உப தேசத்தோடு கூடினதாயும், முந்தி நடந்த சரித்ரத்தோடு கூடின தாயுமிருக்கிறதெதுவோ அது, இதிஹாஸமெ"ன்று சப்தகல் தோமத்தில் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட லக்ஷணங்க ளோடு கூடிய இதிஹாஸங்களெவையெனில், வால்மீகி மஹர் ஷியால் வெளிப்படுத்தப்பட்ட ராமாயணம், வேதவ்யாஸ மஹர் ஷியால் வெளிப்படுத்தப்பட்ட மஹாபாரதம், கர்க்காசார்யரால் வெளிப்படுத்தப்பட்ட கர்கஸம்ஹிதை, இவைகளே. ராமாய ணம் பூர்வ கண்டம, உத்தரகண்டமென இருவகைப்படும். இவை ஸ்ரீவால்மீகி மஹர்ஷியால் செயயப்பட்டன. பூர்வகண்டம் விஷ் ணுவின் அம்சத்தினலவதாரஞ் செய்த ஸ்ரீராமருடைய சரித்ரம். உத்தரகண்டம் ப்ரஹ்ம புத்ரரான ஸ்ரீவஸிஷ்ட மஹர்ஷியால் ஸ்ரீராமருககு ஆத்மதத்வோபதேசமாகிற வேதாந்த ஸாரத் தைத் திரட்டிச்சொன்னதை, வால்மீகி ஸ்ரீபரத்வாஜருக்குபதே சித்தது. பூர்வகண்டத்தில் தர்மார்த்தகாமமோக்ஷங்களாகிற நான்கு புருஷார்த்தங்களில் முந்திய மூன்றும் நன்றுய் விளக்கப் பட்டிருக்கின்றன.

அப்புருஷார்த்தங்களில் 'தர்ம' மென்பது மனிதன் தனக் கியல்பானதும், நியாயமானதும், சாஸ்த்ர விரோதமில்லாததுமான கார்யங்களே அனுஷ்டித்தல். 'அர்த்த' மென்பது—பொருள் அல்லது ப்ரயோஜனம். 'காம' மென்பது—விருப்பம் அல்லது ஆசை. இவைகளிலொவ்வொன்றினுடைய ஸ்வரூபத் தையும் விளக்கிக் காட்டியிருக்கிறுர்.

எப்படி யெனில், பிதாவினுடைய கட்டளை ந்யாயமானலும், அந்யாயமானலுமதை யோசியாமல், அதனல் துக்கம் முதலியவை யுண்டாவதா யிருந்தாலும், அக்கட்டளையை நிறைவேற்றுவது புத்ரனுடைய கடமையென்ற தர்மமானது பிதரு வாக்ய பரிபாலனஞ்செய்ய ராமர் காட்டிற்குச் சென்றதினுலும்; ஸஹோதரர்கள் ஒருவருக்கொருவரிருக்கவேண்டிய அன்பு இப்

படிப்பட்ட தென்பதையும், ஜ்யேஷ்ட ஸஹோதரனிடத்தில் மற்ற ஸஹோதரர்கள் நடந்துகொள்ள வேண்டிய க்ரமத்தையும், பரதர், லக்ஷ்மணர், சத்ருக்னர் இவர்களுக்கும் ராமருக்கும் நடந்த சரித்ரத்தினாலும்; ஸ்த்ரீகள் புருஷனை விட்டுத் தனிமையிலிருக்கலாகாது, புருஷனுக் கெப்படிப்பட்ட துன்பம் நேரிட்டாலுமதை மனைவியுங்கூட விருந்தனுபவித்துக்கொண்டு புருஷனுக்குச் சுச்ரூஷை செய்யவேண்டியது ஸ்த்ரீகளுடைய கடமையென்ற தர்மம், ஸீதையைக் காட்டிற் கழைத்துப் போனதாலும்; ரிஷிகள், தபஸ்விகள் முதலியவர்களுக்குத் துன்பமுண்டாகாமல் ரக்ஷிக்கவேண்டியது க்ஷத்ரிய தர்மமென்பதை, விராதன் முதலிய ராக்ஷஸர்களை ராமன் வதஞ்செய்து ரிஷிகளுக்கு ப்ரியமுண்டாக்கினதாலும்; சக்ரவர்த்தியா யிருந்தாலுங்கூட மஹர்ஷிகள் முதலிய பெரியோர்களை வணங்குவது தருமமென்பதை ரிஷிகளை வணங்கியுபசரித்ததாலும்; ஸாதுக்களுக்குத் துன்பஞ்செய்பவனும் தர்மங்களுக்குக் கெடுதி செய்பவனும் வருகிறவன் எவ்வளவு பலமுள்ளவனானாலும் ஸைன்யமுள்ளவனானாலுமவன் புத்ரமித்ராதிகளுடன் நசித்துப்போவானென்கிற நீதியானது ராவணாதிகளுடைய வதத்தாலும் வெளியிடப்பட்டது. இவைமாத்ரமல்ல. பின்னுமனேகவித தர்மங்களு மூலகத்திற்கு வெளியிடப் பட்டிருக்கின்றன.

தாமத்தைவிட அர்த்தம் அற்பமென்பதை ராமர் ராஜ்ய ஐச வர்யத்தை யிழந்து காட்டுக்குச் சென்றதாலும்; தனக்கு அற்பமேனும் யாராவதுபகாரஞ் செய்திருந்தாலதற்குப்ரதி ப்ரயோஜனந் தன்னாற் கூடியவரையில செய்ய வேண்டியது கடமையென்பதை ஜடாயு விஷயத்திற் காண்பித்து, ஜடாயுவுக்கு ஸம்ஸ்காரஞ் செய்து அவன் நற்கதி யடையும்படி அனுக்ரஹஞ் செய்ததாலும்; தான் வ்யஸனமுற்று ஸீதையைத் தேடி அலையுங்காலத்தில் தன்னை யாதரித்து ஸீதையின் ஆபரணத்தைக் கொடுத்து அவள் ஜீவித்திருக்கிறாளென்று தனக்கு தைர்யத்தை யுண்டாக்கின ஸுக்ரீவனுக்கு ப்ரதி ப்ரயோஜனமாக ராஜ்யாதிபத்யத்தைக் கொடுத்ததாலும்; துக்கத்தால் மனவருத்த மடைந்து தன்னைச் சரணமடைந்த விபீஷணனுக்குச் சிரஞ்சீவிப் பட்டத்தையும் ராஜ்யத்தையு மளித்ததாலும் வெளியிட்டார்.

காமமானது, நியாயவிரோதமானதாயும் அக்ரமமாயு மிருக்கக்கூடாது. அப்படியிருக்குமானால் அதனால் தனக்கே நாசமுண்டாகு மென்ற விஷயத்தைக் கைகேயியிடத்திலுள்ள காமத்

தால் தசரதர் ஜ்யேஷ்ட புத்ரனைக் காட்டிற்கனுப்பியதாலும்; ஸீதையின் வார்த்தையைக்கேட்டு ராமன் மான்பின் தொடர்ந்ததால் ஸீதையைப பறிகொடுத்துத் துன்பமடைந்ததாலும்; ஸுக்ரீவ தானுடைய பார்யையை அபஹரித்ததால் வாலி மரணமடைந்ததாலும்; ஸீதையை பலவந்தஞ்செய்து ராவணனழிந்து போனதாலும் காம ஸ்வரூபம் வெளியிடப்பட்டது.

ஆனலிப் பூர்வகண்டத்தில் மோக்ஷஸாதனமான சில சரித்ரங்களைச சொல்லியிருந்தாலும், மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனமான யோகம், ஞானம், ப்ரஹ்ம ஸ்வரூபலக்ஷணம், மோக்ஷஸ்வரூப மிவைகளை நன்ருய் விளக்கவில்லை. ஏனென்ருல், அவ்விஷயங்கள் உத்தரகண்டத்தில பூர்ணமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. பூர்வகண்டமானது குசலவர்களெனகிற வாலிபர்களுக்குபதேசிக்கப்பட்டதால் ஆத்மதத்வம் பூர்ணமாய் விளக்கப்படவில்லை. இக்கண்டம் ஆறுகாண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டு, 24,000 க்ரந்தங்களடங்கியிருக்கின்றன. ஆருவது காண்டத்தில் பூர்வகாண்டம், உத்தரகாண்டமென இரண்டு பிரிவுண்டு.

உத்தரகண்டத்தில் மோக்ஷத்திற்கு முக்ய ஸாதனமான ஆத்மதத்வமாகிற ப்ரஹ்மஸ்வரூபமானது ஸ்ரீவஸிஷ்ட மஹர்ஷியினல் ராமருக்கு நன்ருயுபதேசிக்கப்பட்டிருக்கிறது. இதையே பரத்வாஜருக்கு வால்மீகிமஹர்ஷி உபதேசித்தார். இது 32,000 க்ரந்தங்களடங்கிய ஆறு காண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டுக் கடைசி காண்டம் பூர்வம், உத்தரம் என்ற இண்டு பிரிவாயிருக்கிறது. இதில் ஆத்ம தத்வஞ்ஞானம் பூர்ணமாய் விளக்கப்பட்டிருக்கிறபடியால், இதற்கு ஞானவாஸிஷ்ட ராமாயணமென்றும், யோகத்தை விரித்துரைத்திருக்கிறபடியால் யோக வாஸிஷ்ட ராமாயணமென்றும் பெயர்களுண்டாயின. இதை உபபுராணங்களிலொன்ருக ஒருவர் கணக்கிட்டிருக்கிருர். அதற்கு யாதொரு ஆதாரமுமில்லை.

VIII.

வால்மீகி ராமாயணத்தின் மஹிமை.

ஸ்ரீயஃபதியாய், அவாப்தஸமஸ்த காமனய், ஸகல கல்யாண குணங்களுக்குமிருப்பிடமாய், ஸர்வேசனுமாயிருக்கும் ஸ்ரீமந் நாராயணன், வைகுண்டமென்னும் திவ்ய லோகத்தில் "ஜகத்பதியும், மனலக்ஷ்கெட்டாத ஸ்வபாவமுள்ளவனுமான மஹாவிஷ்ணுவானவர், பகவானுடைய கைங்கர்யத்திலேயே ஆனந்தமடைந்த

பக்தகோடிகளுடனும் மஹாலக்ஷ்மியுடனும் விளங்குகிறார்" என்றப்ரகாரம், ரத்ன மண்டபத்தில் ரத்னஸிம்ஹாஸனத்தில், ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளுடன் கொலுவிருந்து, நித்ய ஸூரிகளாலும், முக்தர்களாலும் எப்பொழுதும் பாத ஸேவை பண்ணப்பட்டிருந்தும், அப்படியே தன்னுடைய திவ்ய சரண கைங்கர்யத்திற்கு யோக்யர்களாயிருந்தும், மெழுகுண்டையில் தங்கப்பொடிகள் ஒட்டிக்கொண்டிருப்பதுபோல் மஹாப்ரளயத்தில் ப்ரகிருதியில் மூழ்கியிருக்கும் அல்பஞானமுள்ள ஜீவாத்மாக்களைப்பார்த்து, "இந்தப்ரகாரம் தங்களுடைய பூர்வ கர்மங்களினால் ஸம்ஸார ஸாகரத்திலகப்பட்டுச் சுழன்றுகொண்டு துக்கமடைந்திருக்கும் ஜீவர்களிடத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணுவிற்கு அகாரணமாய் அளவற்ற கிருபை உண்டாயிற்று" என்றபடி தயவுண்டாயக "கை கால் முதலிய அவயவங்களுடன் கூடின விசித்ரமான தேஹமானது ஈச்வரனுடைய கைங்கர்யத்தில் உபயோகிப்பதற்கே உண்டுபண்ணப்பட்டது" என்றபடி ஜீவர்களுக்குத் தேஹங்களைக் கொடுத்தனுக்ரஹித்தார்.

அப்படியிருந்தும், நதியைத்தாண்டுவதற்காகக் கொடுக்கப்பட்ட ஓடங்களைக்கொண்டு வெள்ளத்தின் வழியாக ஸமுத்ரம் போய் விழுகிறவர்களைப்போல அந்த ஜீவர்கள் அந்தத் தேஹங்களால் விஷயஸுகத்தில் ஆசைப்பட்டு அதிலேயே மூழ்கியிருந்தார்கள். அதைக்கண்டு அவர்களுக்கு நன்மை தீமையின் விவேகம் தெரிவதற்கு ஈச்வரன் தன்னுடைய ஆக்ஞாரூபமான வேதங்களை வெளியிட்டார்.

அப்பொழுதும் அவைகளின் அர்த்தங்களை ஸரியாகத் தெரிந்துகொள்ளாததாலும், வேறுவிதமாயும் விபரீதமாயும் க்ரஹிப்பதாலும், அவைகளை ஜீவன்கள் லக்ஷ்யம் செய்யாமற்போனபோது, அரசன் தன்னுடைய ஆக்ஞையை மீறின ப்ரஜைகளைத் திருத்துவதற்குத் தானே நேரில் போக விரும்புவதுபோல் "சிறந்தவர்கள் செய்வதையே மற்றவர்களும் அனுஷ்டிப்பார்கள்" என்ற பகவத்கீதா வசனப்படி பகவானும் தர்மங்களைத்தானே அனுஷ்டித்துக் காட்டி ஜீவர்களையு மனுஷ்டிக்கச் செய்வதற்கு ராம லக்ஷ்மண பரத சத்ருக்ன ரூபமாக அவதரிக்க உத்தேசித்தார்.

இப்படியிருக்கையில ப்ரஹ்மா முதலிய தேவகணங்கள், ராக்ஷஸர்கள் முதலிய துஷ்டர்களால் தங்களுக்கும் உலகங்களுக்கு மேற்பட்ட துக்கத்தை நிவர்த்திக்கும்படி ப்ரார்த்தித்ததாலும், பூர்வ ஜன்மங்களில் தன்னைப் புத்ரனாக அடையவேண்

டுமென்று தபஸ் செய்த தசரதருடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்வதற்காகவும் "ஸாதுக்களைக் காப்பாற்றி, துஷ்டர்களைச் சிக்ஷித்து, தர்மத்தை நிலைநிறுத்துவதற்கு ஒவ்வொரு யுகத்திலும் நான் அவதாரம் செய்கிறேன்" என்று பகவத்கீதையில் செய்த ப்ரதிக்ஞைப்படி ராமன், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என்ற திவ்ய நாமங்களுடன் தசரதரிடம் நான்கு குமாரர்களாக அவதரித்தார்.

ராமரூபியாய் ராவணனை ஸம்ஹரித்து, பிதிருவாக்ய பரிபாலனம் முதலிய ஸாமான்ய தர்மத்தையும்; லக்ஷ்மணரூபியாய் இந்த்ரஜித்தைக் கொன்று பகவத் கைங்கர்யமாகிய விசேஷ தர்மத்தையும்; பரதரூபியாய் கந்தர்வர்களை ஜயித்து, பகவானைத் தவிர வேறு கதியில்லை யென்ற தர்மத்தையும்; சத்ருக்னரூபியாய் லவணாஸுரனைக் கொன்று பகவத் பக்தர்களுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்கிற தர்மத்தையும் தானே அனுஷ்டித்துக் காட்டினார்.

அந்தத் தர்மங்களும், அந்தத் திவ்ய சரிதங்களும் எப்பொழுதும் உலகத்தில் வழங்கி வரவேண்டுமென்று நினைத்து, எல்லா லோகங்களுக்கும் க்ஷேமத்தைச் செய்வதிலேயே நோக்கமுள்ள ப்ரஹ்ம தேவர், ராமனுடைய புண்யகரமான திவ்ய சரிதத்தை நூறுகோடி க்ரந்தங்களால் செய்து, அதை நாரதர் முதலியவர்களுக்கு உபதேசித்துப், பின்பு ராமமந்த்ரத்தை எப்பொழுதும் ஜபிப்பதால் பரிசுத்தரான வால்மீகியின் மூகமாய் பூலோகத்தில் சுருக்கமாய் அதைப் பரவச் செய்வதற்காக நாரதரை அவரிடம் அனுப்பினார்.

"ப்ரஹ்மதேவரால் விஸ்தாரமாகச் செய்யப்பட்ட ராம சரிதத்தை அவருடைய உத்தரவின்படி நாரதர் வால்மீகி மஹர்ஷிக்கு உபதேசித்தார்"—மத்ஸ்ய புராணம். வால்மீகியும் ஸகல வேதாந்தங்களினால் அறியக்கூடிய பரம புருஷனுடைய ஸ்வரூபத்தை நிச்சயிப்பதற்குத் தைவச்செயலாய் வந்த நாரதரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, தன்னிடத்தில் ஸந்தோஷமடைந்த ப்ரஹ்ம தேவரால் கொடுக்கப்பட்ட திவ்ய திருஷ்டியால் பார்த்து, வேதத்தின் அர்த்தங்களை விவரிக்கும் ராமாயணமென்னும் காவ்ய ரத்னத்தைச் செய்தார்." (வா-ரா. கோவிந்த ராஜீய வ்யாக்யானம், பீடிகை.)

IX

ராமாயணம் காயத்ரியின் விவரணம்.

வேதமாதாவாயும், ஏழுகோடி மஹா மந்தரங்களுக்குள் ச்ரேஷ்டமான மந்த்ர ரத்னமாயும், ஸகல புருஷார்த்தங்களை அடைவதற்கு முக்ய ஸாதனமாக ப்ராஹ்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்களால் மூன்று காலங்களிலும் உபாஸிக்கப்படுவதாயுமிருக்கும் காயத்ரி மஹாமந்த்ரத்தின் 24 அக்ஷரங்களும் ஸ்ரீமத்ராமாயணத்தின் 24,000 ச்லோகங்களில ஒவ்வொரு ஆயிரத்தின் ஆதி அக்ஷரங்களாக, முறையே வால்மீகி மஹர்ஷியால அமைக்கப பட்டிருக்கின்றன.

காண்டம்.	ஸர்க்கம்.	ச்லோகம்.	ஆயிரம்.
பால	1	1	1,000
...	30	17	2,000
....	63	3	3,000
அயோத்யா	14	37	4,000
....	44	5	5,000
....	71	33	6,000
....	99	25	7,000
ஆரண்ய	12	4	8,000
....	47	10	9,000
கிஷ்கிந்தா	4	3	10,000
....	31	1	11,000
....	67	50	12,000
ஸுந்தர	27	14	13,000
....	46	9	14,000
....	68	29	15,000
யுத்த	28	26	16,000
....	50	40	17,000
....	68	1	18,000
....	80	43	19,000
....	112	26	20,000
....	131	120	21,000
உத்தர	22	8	22,000
....	40	29	23,000
....	77	27	24,000

X.

ராமாயண ரஹஸ்யார்த்தம். i.

"இதிஹாஸ புராணங்களால் வேதாந்தத்தின் அர்த்தம் வெளிப்படுத்தப்படுகிறது" என்று சொல்லியிருப்பதால், இந்தக் காவ்யத்தில் வேதாந்தத்தின் விஷயமே சொல்லியிருக்கவேண்டும்.

முதலாவது.

"இந்த ஸகல லோகங்களும் எதனிடமிருந்து உண்டாகின்றனவோ, உண்டானவைகள் எதைக்கொண்டு ஜீவிக்கின்றனவோ, எதினிட ம்டங்குகின்றனவோ அதே பரப்ரஹ்மம" என்று ச்ருதியினல் சொல்லப்படும் வஸ்து எது? ப்ரஹ்மாவா? அல்லது விஷ்ணுவா? அல்லது ருத்ரனு? என்ற ஸந்தேஹத்தை 'இவ்வளவு கல்யாண குணங்கள் பொருந்தியவர் யார்?' என்று முதலில் காண்பித்து, ஸ்ரீராமனே அந்த வஸ்துவென்று முடிவிலும் ப்ரஹ்மாவால் சொலலப்பட்டிருக்கிறது. "ஆதியில் நான் உம்முடைய புத்ரனுகவிருந்தேன். முன் ஸகலலோகங்களையும் உமக்குள்ளடக்கிக்கொண்டு, மாயையால் மஹாப்ரளய ஜலத்தில் சயனித்துக்கொண்டு, முதலில உன்னுடைய தொப்புளிலிருந்து உண்டான திவ்யமான தாமரைப் புஷ்பத்தில் என்னை உண்டு பண்ணி, ஜனங்களை ஸிருஷ்டிக்கும் வேலையையும் எனக்குக் கொடுத்தீர்."—வா-ரா. 7.

மேலும், இதே விஷயம் க்ரந்தத்தின் மத்யத்திலும் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது.

"இதற்குள், ஸகல ஜகத்திற்கு மதிபதியான மஹாவிஷ்ணுவானவர், சங்கம், சக்ரம், கதை, முதலிய ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, பீதாம்பரத்தினல் அலங்கரிக்கப்பட்டவராய், நிகரில்லாத காந்திபொருந்தி அங்கே வந்தார்."—(வா-ரா. I. 15.)

"ஓ தேவ, சத்ருக்களை நாசஞ்செய்பவரே! நீர்தான் எங்களெல்லோருக்கும் கதி" என்றதனுல பரம புருஷனே எல்லோரும் சரணமடையத்தகுந்தவரென்றும்;

"பின்பு தேவர்களும், ரிஷிகளும், ருத்ரர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்களும் திவ்யமான ஸ்தோத்ரங்களால் மதுஸூதனனைக் கொண்டாடினார்கள்" என்றதால் எல்லோராலுங் கொண்டாடக்கூடியவரென்பதும்;

"நான் மஹாத்மாவும், ஸத்ய பராக்ரம முள்ளவருமான ராமனுடைய உண்மையை அறிவேன். மஹா தேஜஸ்வியான

வஸிஷ்ட மஹர்ஷியும் மற்றுமுள்ள தபஸ்விகளும் அறிவார்கள்" "ஸூர்யன்போல தேஜஸ்வியான இந்த மஹா புருஷன் அக் ஞானத்தைத் தாண்டினவரென்று நானறிவேன்." "அந்தப புருஷனை ப்ராஹ்மணர்கள் வேதோபதேசத்தாலும், தானத்தாலும் அறிய விரும்புகிறார்கள்" என்றதால அவர் மஹாபுருஷரென்பதும், தபோபலத்தாலல்லது வேறு காரணத்தினால அறியக்கூடாதவரென்பதும் ;

"அவ்யக்தத்திலிருந்து ப்ரஹ்மதேவர் உண்டானார்" என்றதினால் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாயிருப்பவரென்பதும் ;

"தேவர்களும், மஹர்ஷிகளும், அப்பொழுது மஹாவிஷ்ணுவை மேலானவராகத் தெரிந்துகொண்டார்கள்" என்பதால எல்லோருக்கும் மேலானவரென்பதும ;

"ஸநாதனரான, மஹா விஷ்ணுவானவர் லோகங்களுக்கு, உபத்ரவஞ் செய்துகொண்டிருந்த ராவணனைக் கொல்லவேண்டுமென்று ப்ரார்த்தித்த தேவர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து பூமியில் அவதரித்தார்" என்பதால் எக்காலத்திலுமுள்ளவரென்பதும் ;

"சாசுவதனும, நியந்தாவும், குறைவில்லாதவனுமான ப்ரஹ்மதேவர் அவ்யக்தத்திலிருந்து உண்டானார்" என்பதால் ஸ்வயம் ப்ரகாசரென்பதும், ஸர்வ வ்யாபகரென்பதும ;

"ஜனகருடைய குமாரியான ஸீதை எவருக்கு ஸ்வாதீனப்பட்டவளோ அவருடைய தேஜஸானது அளவிடக் கூடாதது" என்றதால் அளவிடக்கூடாத மஹிமையுள்ளவரென்பதும் ;

"ஸாதுக்களுக்குத் தங்குமிடமாயும், ஆபத்தையடைந்தவர்களுக்கு முக்யமான கதியாயும், துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அதின் நிவர்த்திக்காக அடையும் வஸ்துவாயும், கீர்த்திக்கு முக்யஸ்தானமாயும், ஸாதாரண விசேஷ ஞானங்களுள்ளவராயும், பிதாவின் உத்திரவைத் தவறாதவராயும இருக்கிறாய். நீ அளவிடக்கூடாதவன் ; அடைய முடியாதவன் ; இந்த்ரியங்களை ஜயித்தவன் ; உத்தம தர்மத்தை அனுஷ்டிப்பவன் ; அழியாத கீர்த்தியுள்ளவன் ; விவேகமுள்ளவன் ; பூமிபோன்ற பொறுமையுள்ளவன் ; செந்தாமரைபோன்ற கண்களுள்ளவன்" என்றதால, ஞானம, ஆனந்தம் முதலிய ஸகல கல்யாண குணங்கள் பொருந்தியவரென்றும் ;

"ஸ்வயம்புவும் நான்கு முகங்களுள்ளவருமான ப்ரஹ்மதேவரும், த்ரிபுராஸுரர்களைக் கொன்ற முக்கண்ணுடைய

ருத்ரனும், தேவர்களுக்கதிபதியான மஹேந்த்ரனும், ராமனுல் கொல்லவேண்டுமென்று குறிக்கப்பட்டவனைக் காப்பாற்ற அசக்தர்கள்" என்றதால் ஸகலத்தையும் ஸம்ஹாரஞ் செய்யக்கூடிய சக்தியுள்ளவரென்பதும்;

"முடிவில்லாததும், அவ்யக்தமாயும், மனதிற்கெட்டாததாயும், ஒன்றாயும், எல்லாவற்றிற்கும மேலானதாயுமிருக்கிற மஹா விஷ்ணுவினுடைய தேஜஸானது தன்னுடைய மாயையால் இப்பொழுது ராக்ஷஸர்களை நாசஞ்செய்வதற்கு வானர ரூபமெடுத்து இவ்விடம் வந்ததோ?" என்றதால் நினைக்கமுடியாத ரூபமெடுக்கச் சக்தியுள்ளவரென்பதும் விளங்குகின்றன.

ஆக்ஷேபம் "ஹிரண்ய கர்ப்பன் ஆதியில் இருந்தான்." "எப்பொழுது இரவாவது, பகலாவது, ராத்ரியாவது, ஸத் என்பதாவது, அஸத் என்பதாவது இல்லையோ அப்பொழுது இவர் மாத்ரம் இருந்தார்." "இந்த்ரன் மாயைகளால அநேக ரூபங்களை எடுத்தான்" என்ற ச்ருதிவாக்யங்களால் ப்ரஹ்மா, ருத்ரன் முதலிய மற்றவர்களும் ஜகத்திற்குக் காரணமாகலாமே.

ஸமாதானம். "இந்த மஹாயோகியானவர் பரமாத்மா; ஸநாதனர்; ஆதி, மத்ய, அந்தமில்லாதவர்; மஹத்தத்வத்திற்கும் தமஸிற்கும் மேற்பட்டவராகையால் எல்லாவற்றிற்கும் மேலானவர்; எல்லாவற்றையுங் காக்கிறவர்; சங்கம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவர்; ஸ்ரீவத்ஸம் என்ற மறுவுடன் கூடிய மார்புள்ளவர்; எப்பொழுதும் லக்ஷ்மியை விட்டுப் பிரியாதவர்; ஒருவராலும் ஜயிக்கமுடியாதவர்; சாச்வதர்; அழியாதவர்" என்றதால் மற்றவர்களைக்காட்டிலும் ச்ரேஷ்டர். ப்ரஹ்மா, சிவன், இந்த்ரன் இந்த சப்தங்கள் ஸத், ஆத்மா முதலிய சப்தங்களைப் போல மஹா விஷ்ணுவையே குறிக்கின்றன. ஆகையால் அவர் ஸ்ரீபதி, பரமாத்மா என்பதும், "நீரே நாராயணன்; லக்ஷ்மியுடன் கூடியவர்; சக்ராயுதமுள்ளவர்; எங்குமிருப்பவர்; ஒற்றைக்கொம்புடன் வராஹவதாரம் செய்தவர்; மூன்றுகாலங்களிலுமுள்ள சத்ருக்களை ஜயித்தவர்" என்றதால் அவர் நாராயணன் என்பதும் விளங்குகின்றன.

ஆக்ஷேபம். "தேவர்கள் விஷ்ணுவை மேலானவரென்று நினைத்தார்கள்" என்ற வசனத்தில, "எண்ணினார்கள்" என்பதால், விஷ்ணு மிகுந்த வீர்யமுள்ளவரானாலும், அது தற்காலத்தில் வரத்தினால கிடைத்ததேயொழிய இயற்கையாயில்லை என்று கருத்து.

ஸமாதானம். அப்படியிருந்தால் பரமசிவனுக்குக் கோபம் வரக் காரணமில்லை. ஆனால் "ருத்ரன் கோபத்துடன் தனுஸை" என்றதினால் கோபமடைந்ததாகத் தெரியவருகிறது. மேலும், அகஸ்த்ய மஹர்ஷியின் ஆச்ரமத்தில் "ப்ரஹ்மா, விஷ்ணு, அக்னி, இந்த்ரன், ஸூர்யன், சந்த்ரன், பகன், குபேரன் முதலியவர்கள் பூஜிக்குமிடங்களைக் கண்டார்" என்றதால், ருத்ரனுக்கு அகஸ்த்யாச்ரமத்தில் பூஜாஸ்தானமேற்படவில்லை; அவரைப் பூஜிக்கத்தகுந்தவராய் எண்ணவுமில்லை.

ஆக்ஷேபம். இவர்கள் அகஸ்த்யர்களைப் பூஜிக்கிறவர்களாய் ஏனிருக்கக்கூடாது? ருத்ரன் இவர்களுக்கு மேலானவராகையால் அவர்களுடன் சேர்க்கப்படவில்லை. "இவ்விடம் தேவர்களும், கந்தர்வர்களும், ஸித்தர்களும், மஹர்ஷிகளும், எப்பொழுதும் அகஸ்த்யரை உபாஸிக்கிறார்கள" என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா?

ஸமாதானம். இப்படிச்சொல்வது பொருந்தாது. முன் காட்டிய ஆதார வசனத்தில் தேவர்களென்றால் ஸாமான்ய தேவர்களென்றே அர்த்தம். ப்ரஹ்மா முதலிய தேவர்களென்று அர்த்தமில்லை. மேலும் ஒருவனுடைய வீட்டில் தேவாலயமிருக்குமபக்ஷத்தில் அவன் பூஜிக்கும் தேவதையின் ஆலயமென்று சொல்லவேண்டுமேயொழிய அவனைப் பூஜிக்கிற தேவதைகளுடைய ஆலயமென்று சொல்வது ந்யாயமில்லை. மேலும் தக்ஷயாகத்தில, பரமசிவனுக்கு யக்ஞபாகம் ஏற்படவில்லை யென்பதால் அவர் பூஜிக்கத்தகுந்தவரல்ல. அவருக்கு அகஸ்த்யாச்ரமத்தில் ஸ்தானம் ஏற்படவில்லை. பரம புருஷனுக்கு முக்ய லக்ஷணமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கும் தன்மை ஜடாயு விருத்தாந்தத்தால் ராமனுக்கே காட்டபபட்டிருக்கிறது.

ஆகையால் வேதாந்தத்தால் அறியவேண்டிய பரவஸ்து மஹாவிஷ்ணுவே என்று ராமாயணத்தால் தெரியவருகிறது.

"இந்த ஸபை நடுவில் நான் சொல்வதைக்கேள். உன்னுடைய சரித்ரத்தைச் சொல்லுகிற இந்தக் காவ்யமே எல்லா காவ்யங்களிலு முத்தமமானது. உம்மைப்பற்றிய ஸகல விஷயங்களையும் விஸ்தாரமாகச்சொல்லும் இதுவே ஆதிகாவ்யம். உம்மைத்தவிர வேறொருவன் காவ்யங்களால் கீர்த்தியடையத் தகுந்தவனல்ல. எல்லாம் உம்மையே ஆதாரமாகக்கொண்டவை." என்று முடிவில் ப்ரஹ்மதேவரால் சொல்லப்பட்டிருக்கிறது. தகாதவன் என்ற வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் ருத்ரனுடைய

விஷயமாய் ராமாயணத்தைச் சிலர் அர்த்தம் செய்வது முற்றிலும் ஒவ்வாது.

ஆக்ஷேபம். ஆனால் ராமன் பரதைவமாயிருந்தால் ஸூர்யன் முதலானவர்களை உபாஸித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது ஒவ்வுமா?

ஸமாதானம். விசுவாமித்ரரைக் குருவாயடைந்ததுபோல், மனுஷ்ய பாவனையாக நடத்திக்காட்டினதே தவிர வேறில்லை.

பாலகாண்டத்தில், மஹாவிஷ்ணுவானவர் ப்ரபஞ்சத்தின் உத்பத்திக்குக் காரணமென்றும், அயோத்யாகாண்டத்தில் ரக்ஷிக்கிறவரென்றும், ஆரண்யகாண்டத்தில்மோக்ஷத்தைக் கொடுப்பவரென்றும், கிஷ்கிந்தாகாண்டத்தில் ஸகல கல்யாண குணங்களும் பொருந்தினவரென்றும், ஸுந்தரகாண்டத்தில் எல்லோரையும் கொல்லும் தன்மையுடையவரென்றும், யுத்தகாண்டத்தில் வேதாந்தத்தால அறியக்கூடியவரென்றும் காட்டப்பட்டிருக்கிறது.

இரண்டாவது.

சங்கை. இப்படிப்பட்ட பரமபுருஷன் எந்த ஸாதனத்தினால் அடையப்படுவான்?

ஸமாதானம். "எவன் முதலில் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்தானோ, எவன் அவருக்கு வேதங்களை உபதேசித்தானோ, ஆத்மா, புத்தி முதலியவைகளை யனுக்ரஹிக்கும் அப்படிப்பட்ட தைவத்தை, மோக்ஷத்தை விரும்புகிற நான் சரணமடைகிறேன்" என்ற ச்ருதியின் தாத்பர்யத்தை வால்மீகிமஹர்ஷி ராமாயணத்தில் ஆரம்பமுதல் முடிவுவரையில், பகவானைச் சரணாகதி செய்வது தான் ஸமஸ்த பலத்தை யடைவதற்கும் ஸாதனம் என்று காட்டியிருக்கிறார். எப்படி யென்றால்:

1. "இவ்வளவில் ஸகல ஜகத்திற்கும் நாதனாகிய விஷ்ணுவானவர் பீதாம்பரத்தையும், சங்கம் முதலிய ஆயுதங்களையும் தரித்தவராய் மஹாகாந்தியோடு அவ்விடம் வந்தார்" என்றதால் ஸர்வேசனும், தங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று எப்பொழுது தேவர்கள் கேட்பார்களென்று எதிர்பார்த்தவராயும், ரக்ஷிப்பதற்குக் காலம் வந்துவிட்டது என்ற எண்ணத்தினால் விசேஷகாந்தியுள்ளவராயுமிருக்கும் பகவான் ரக்ஷிப்பதற்குவேண்டிய ஆயுதங்களுடன் ஸித்தமாக வந்தார். ராவணனை வதம் செய்ய வேண்டி அவரைத் தேவர்களெல்லாம் அப்பொழுது சரணமடைந்தார்கள், என்று சரணாகதி தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது.

2. சுனச்சேபன், த்ரிசங்கு இவர்களின் சரித்ரத்தால் சரணமடைந்தவனைக் காப்பாற்றுவது உத்தமமான தர்மம்; ரக்ஷிக்கச் சக்தியுள்ளவனும் கருணையுள்ளவனுமிருக்கும் ஒருவனைச் சரணமடைந்தால் அது வீண்போகாது என்று காட்டப்பட்டிருக்கிறது.

3. "பரதர் தமையனுடைய பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஸீதையை முன்னிட்டு ராமனை ப்ரார்த்தித்தார்" என்றதால் வேறொருவரை முன்னிட்டுக்கொண்டே சரணமடைய வேண்டுமென்று தெரியவருகிறது.

4. "ராமன் என்னிடம் கிருபை செய்கிறவரையில் இந்த ஆச்ரமத்தில் உபவாஸமாகப் படுத்திருப்பேன்" என்று பரதன் ராமனுக்கு அபிஷேகம் செயகிறதான பலத்தைப் பற்றிச் சரணமடைந்தார். ஆனால் பகவான் தேவதைகளுடைய ப்ரார்த்தனைப்படி ராவண வதஞ்செய்வதற்காக ஊரைவிட்டுவந்ததால், தனக்குப் பதிலாகத் தன்னுடைய பாதுகைகளைகொண்டு பரதன் சரணாகதிக்குப் பலத்தைக்கொடுத்து ராவண வதத்தால் தேவர்களுடைய சரணாகதியை ஸபலமாகசசெய்து பிறகு தான் ராஜ்யமடைந்தார். ஆகையால் சரணாகதிக்கு ஒருபோதும பலமில்லாமல் போகாது.

5. தண்டகாரண்யத்தில் வஸிப்பவர்கள் "ராம! உம்முடைய ராஜ்யத்திற்குள் வஸிக்கிற எங்களைக் காப்பாற்றவேண்டியவர் நீரே. நகரத்திலிருந்தாலும், வனத்திலிருந்தாலும் நீர்தான் எங்களுக்கு அரசன்" என்று தங்களுடைய சத்ருக்களை நாசஞ்செய்வதற்காக ராமனைச சரணமடைந்தார்கள். பகவானுடைய ராஜ்யத்தில் வஸிப்பதே பகவானைச் சரணமடைவதாக ஏற்படும்.

6. "அந்தக் காகாஸுரன், தன்னுடைய தகப்பனாகிய மஹேந்த்ரனாலும், தேவர்களாலும், மஹர்ஷிகளாலும் கைவிடப்பட்டு, மூவ்வுலகங்களிலும் சுற்றி முடிவில் ராமனையே சரணமடைந்தான். எல்லோரும் சரணமடையத் தகுந்தவனான ராமன் தன்னைச் சரணமடைந்து பூமியில் விழுந்து கிடக்கும் அந்தக் காக்கையைக் கொல்லத்தகுந்ததானாலும் கருணையால் காப்பாற்றினார்" என்றதால் பகவானுக்கு எதிராகப் பூமியில் விழுவதும் சரணாகதி செய்வதே.

7. "பகவானுக்கு அபராதம் செய்த உனக்குக் கைகூப்பி லக்ஷ்மணனை ப்ரார்த்திப்பதைத் தவிர, வேறுகதியிருப்பதாகத் தோற்றவில்லை" என்று ஸுக்ரீவனைக்குறித்துத் தாரையின் வார்த்

தையால் கை கூப்புவதே சரணாகதியென்று காட்டப்பட்டிருக்கிறது.

8. "ஓ, ராவணா! நீ க்ஷேமம் உண்டாகவேண்டுமென்றும், கோரமான மரணம் நேரிடக்கூடாதென்றும் விரும்பினால் புருஷோத்தமனாகிய ராமனை ஸ்நேகம் செய்துகொள்வது உசிதம். அவர் தர்மத்தையறிந்தவர், சரணமடைந்தவர்களிடத்தில் ப்ரீதியுள்ளவரென்பது லோகப்ரஸித்தம்" என்ற ஸீதையின் வார்த்தையால், பகவானிடத்தில் ஸ்நேஹபுத்தி செய்வதே சரணாகதியென்று தெரியவருகிறது.

9. "நான் ராவணனால் வேலைக்காரனைப்போல் அவமானம் செய்யப்பட்டும், கடுமையாகப் பேசப்பட்டும், பெண்சாதி பிள்ளைகளைவிட்டு ராகவனைச் சரணமடைந்தேன்" என்று விபீஷணனுடைய வார்த்தையால், சரணாகதிக்குத் தடையாயிருக்கும் விஷயங்களை விடவேண்டுமென்பது தெரியவருகிறது.

"பிறகு ஸமுத்ரக்கரையில ராகவன் தர்ப்பங்களைப் பரப்பிக் கிழக்கு முகமாய் கைகூப்பிப் படுத்தார்" என்பதால் ராமன் ஸமுத்ரத்தைச் சரணமடைந்தார் என்றும் தெரிகிறது.

ஆக்ஷேபம். ஆனால் ராமனுடைய சரணாகதிக்கு ஏன் பலமேற்படவில்லை?

ஸமாதானம். யாரைச் சரணமடைகிறானோ அவன் ரக்ஷிக்கச் சக்தியுள்ளவனாயும் கிருபையுள்ளவனாயு மிருக்கவேண்டும். ஸமுத்ர ராஜன் அப்படியில்லை.

10. "ராக்ஷஸர்களுக்கு ராமனிடத்திலிருந்து விசேஷ அபாயம் நேரிடப்போகிறது; ஆகையால் நம்மை ரக்ஷிக்கவேண்டுமென்று ஸீதையை ப்ரார்த்திப்பது யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது" என்ற த்ரிஜடையின் வார்த்தைக்கு ஸம்மதித்ததால், ஸகல ராக்ஷஸிகளும் ஹனுமாரிடத்திலிருந்த பயம் நீங்கிக் காப்பாற்றப்பட்டார்கள். ஆகையால் ஒருவனுக்காக மற்றொருவன் சரணாகதி செய்தால அதுவும் பலிக்கிறதென்பது காட்டப்பட்டது.

11. விபீஷணன் ராமனைச் சரணமடைந்ததினாலேயே அவனுடைய நான்கு மந்த்ரிகளும் காப்பாற்றப்பட்டார்கள். ஆகையால் சரணமடைந்தவனைச் சேர்ந்தவர்களும் பகவானுடைய கிருபைக்குப் பாத்ரமாகிறார்கள் என்று தெரியவருகிறது. மேற்சொன்ன காரணங்களால் இந்தக் காவ்யத்தில் ஆரம்பமுதல் முடிவு வரையில் சரணாகதி தர்மமே ஸமஸ்த பலத்தைக் கொடுக்கக்கூடியதென்றும், அதுவே முக்திக்குக் காரணமென்றும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது.

பகவானை அடைவதற்கு முன்னால், அவருடைய கைங்கர்ய மானது முன் சொன்ன உபாயத்தால் அடையக்கூடியதென்று ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி யென்றால்,

1. தேவதைகள் அப்ஸரஸ் முதலானவர்களிடத்தில் அவதாரஞ்செய்து ராமனுக்குக் கைங்கர்யம் செய்தார்களென்று சொல்லியிருப்பதினால் அவர்கள் பகவானைச் சரணாகதிசெய்ததற்கு ராம கைங்கர்யமே முக்யமான பலம். ராவணவதம் இடையில் நேர்ந்த பலமென்று தெரிகிறது.

2. "ஓ, ராம! நீர் தூங்கும்போதும், விழித்துக் கொண்டிருக்கும்போதும், உமக்கு ஸகலவித கைங்கர்யமும் செய்கிறேன்; நீர் மலையின் தாழ்வரைகளில் ஸீதையுடன் விளையாடலாம்" என்று லக்ஷ்மணன் சொன்னதால், எந்த இடத்திலும், எந்தக்காலத்திலும், எந்த நிலைமையிலும், அவைகளுக்குத் தகுந்த ஸகலவித கைங்கர்யத்தைச் செய்வதே சரணாகதியின் பலமென்று தெரியவருகிறது.

3. பரதன் ராமனுடைய கைங்கர்யத்தை உத்தேசித்தே ராமனுடைய அபிஷேகத்தைப் ப்ரார்த்தித்தார். முதலில் ராமனுடைய பாதுகைகளுக்குக் கைங்கர்யம் செய்யும்படியான பாக்யம் பெற்று க்ரமமாகத்தான் அபேக்ஷித்த பலத்தையடைந்தார்.

4. தண்டகாரண்யத்தில் வஸிக்கும் மஹர்ஷிகள் செய்த சரணாகதிக்குப் பகவானுடைய தர்சனம், அவருடன் பேசுதல் முதலியவைகளே பலமாக ஏற்பட்டதென்பது "தண்டகாரண்யத்தில் வஸிக்கும் தர்மிஷ்டர்களான அந்தத் தபஸிகள் உதயமாகும் சந்த்ரன்போல ப்ரகாசிக்கும் ராமனைப்பார்த்து மங்களாசீர்வசனங்களாலுபசரித்து எதிர்கொண்டழைத்தார்கள்" என்றதால் தெரிகின்றது.

5. "பிறகு ஸூர்ய புத்ரனான ஸுக்ரீவன் யுத்தத்தில் ராவணனை ச்ரமப்படுத்தி, விசேஷ கீர்த்தியடைந்து, திரும்பவும் ஆகாச மார்க்கமாக ராமனுடைய ஸமீபம் சேர்ந்தார்" என்றதால் ஸுக்ரீவனும்; "நான் லங்கையையும், ஸ்நேஹிதர்களையும், ஐச்வர்யங்களையும் விட்டேன். இனிமேல் எனது ராஜ்யம், ப்ராணன் முதலிய யாவும் உம்மிடத்திலிருக்கிறது" என்ற விபீஷணனும் ராமனுடைய கைங்கர்யத்தையே தாங்கள் செய்த சரணாகதிக்கு முக்யமான பலமென்று நினைத்ததாகத் தோன்றுகிறது.

6. ப்ராணனை ப்ரார்த்தித்த காக்கைக்கு ப்ராணனைக் கொடுத்ததாலே அவன் சரணமடைந்து ப்ரயோஜனமுள்ளதா யிற்றென்றும், துஷ்டஸ்பாவமுள்ள அவன் திரும்பவும் இப்படித் துர்மார்க்கத்தில் ப்ரவர்த்திக்கக் கூடாதென்ற கருத்துடன் அவரு டைய ஒரு கண்ணை வாங்கினரென்றும் காட்டப்பட்டிருக்கிறது.

7. பரசுராமனை யுத்தேசித்துத் தொடுத்த அஸ்த்ரமானது, அவர் விரோதமாயில்லாமல் மாறினவுடன், அவருடைய இஷ் டத்திற்கு விரோதமாயிருந்த புண்யங்களை நாசஞ்செய்தது.

8. ராமன் ஸமுத்ரத்தின்மேல் அஸ்த்ரத்தை ப்ரயோகித்த போது, ஸமுத்ரராஜன் அவரைச் சரணமடைய அவருக்குக் கருணையுண்டாயிற்று. ஆகையால் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு விரோதிகளான அஸுரர்களிடத்தில் அந்த அஸ்த்ரத்தை உப யோகித்தார்.

தனக்குச் சக்தியில்லாமை, தன்னைக் காப்பாற்ற வேறொருவ ருமில்லை, என்ற சரணமடைபவனுக்கிருக்கவேண்டிய குணங்கள் ராமனிடத்திலில்லை : ஸமுத்ரத்தினிடத்தில் ஸர்வக்ஞத்வம் ஸர்வ சக்தித்வம் முதலிய குணங்களில்லை; ஆகையால் ராமன் செ ய்த சரணுகதி பலிக்கவில்லை.

விபீஷணன் தான் செய்த சரணுகதி பலித்ததைப்பார்த்து "ஸமுத்ரத்தை ராமன் சரணமடையவேண்டும்" என்று சொன் னர்; ஆகையால் சரணுகதி செய்வதற்குத் தேசம், காலம், அதி காரி, பலம் இவைகளின நியமம் வேண்டாவிட்டாலும், யாரைச் சரணமடைகிறானே அவன் காப்பாற்ற ஸாமர்த்யம், கருணை இவைகள் உடையவனயிருக்கவேண்டும். ராமாயணத்தில் ப்ர பத்தியே முக்யமாயும், அதற்குபயோகமாக மற்ற விஷயங்களும் சொல்லப்பட்டிருப்பதினல் சரணுகதி க்ரந்தமென்று சொல்லப் படுகிறது.

பரமசிவனுடைய வில்லை முறித்தது, பரசுராமனை ஜயித் தது, ஸாலமரங்களைப் பிளந்தது, ஸமுத்ரத்தில் அணைகட்டு வித்தது முதலியவைகளால் ராமன் பரம புருஷனென்றும்; ஸர்வ சக்தன், ஸர்வக்ஞன் என்றும்; ஸீதையை விட்டுப் பிரிந்த காலத்தில் நடந்த சரிதத்தால் விசேஷ கருணையுடையவரென் றும்; குஹன், சபரீ, ஸுக்ரீவன் இவர்களுடன் செய்த விசேஷ ஸ்நேஹத்தால், நல்ல ஸ்வபாவமுள்ளவரென்றும்; விச்வா மித்ர யாகத்தையும், தண்டகாரண்யத்தில் வஸித்த மஹர் ஷிகளையும், ராவணன் முதானவர்களால் பீடிக்கப்பட்ட இந்த்

ரன் முதலான தேவர்களையும் காப்பாற்றினதாலும், தன்னுடைய ராஜ்யத்திலுள்ள ஜனங்களுக்குத் தன்னுடைய ஸௌந்தர்யம், நடத்தை முதலியவைகளால் விசேஷ ஆனந்தத்தை யுண்டு பண்ணித்தான் அவதாரம் செய்ததற்கு ப்ரயோஜனமாகிய தன்னுடைய பதவியையடைதல் என்ற மோக்ஷத்தைக் கொடுத்ததாலும், ஸகல லோகங்களையும் ரக்ஷிக்கிறவர் என்றும் அறிகிறோம். ஆகையால் சக்தி, விசேஷ கருணை, நல்ல நடத்தை இவைகள் பொருந்திய பகவானைச் சரணமடைதல், ஸகல பலத்தையும் கொடுக்கக்கூடியதானாலும், பகவானை யடைவதற்கு முன்னால் அவருடைய கைங்கர்யரூபமான மோக்ஷமே முக்யபலம். மற்ற பலங்கள் இடையில் நேர்பவைகள் என்று செவ்வையாய் விளங்குகிறது.

நான்காவது.

1. வால்மீகியே இந்த க்ரந்தத்திற்கு, ஸீதையினுடைய மஹிமைபொருந்திய சரித்ரம், என்று பேரிட்டிருக்கிறார். தன்னுடைய பர்த்தாவைவிட்டு மூன்றுதடவை பிரிந்திருந்ததால், பகவானைச் சரணமடையும்போது முன்னிட்டுக்கொண்டு போக வேண்டிய புருஷனுக்கு லக்ஷணமான விசேஷ கருணை, பகவானுக்கே உகந்த வஸ்து என்னும் குணங்கள் ஸீதையினிட மிருப்பதாகத் தெரியவருகிறது.

2. தனக்கு சிபார்சு செய்ய ஸீதையிருந்தபடியால் காக்கையின் தலை தப்பிற்று. அந்தச் சிபார்சில்லாததினால் ராவணன் உயிரை இழந்தான்.

3. "நான் விபீஷணன்; சரணமடைகிறேன்; ராமனுக்குத் தெரிவியுங்கள்" என்று பிறர்மூலமாகவே விபீஷணன் ராமனைச் சரணமடைந்தான். ராமனும் "வானரச்ரேஷ்ட! இவனை யழைத்து வாரும்" என்றதால் பிறரைக்கொண்டே சரணமடைந்தவனை யொப்புக்கொண்டார்.

4. ஸுக்ரீவனும் ராமபக்தனாகிய ஹனுமாரைக்கொண்டே ராமனைச் சரணமடைந்தார்.

இந்த காரணங்களால் சரணாகதியானது, தனக்குச் சிபார்சு செய்யும் ஒருவரைக்கொண்டு செய்தாலல்லது பலிக்காதென்று தெரியவருகிறது.

ஐந்தாவது.

பகவானுக்கு நாம் சேஷபூதர்களா யிருக்கவேண்டுமென்ற ரஹஸ்யத்தை "நான் ராமனுடைய இளைய ஸஹோதரன், அவருடைய குணங்களால் அவருக்கு ஈடுபட்ட

வன் ;" "என்னை வேலைக்காரனாய் வைத்துக்கொள்ளும்; இதில் தர்மவிரோதம் யாதுமில்லை. நான் உமது கைங்கர்யத்தால் கிருதார்த்தனுவேன்; உம்முடைய உத்தேசமும் நிறைவேறும்" என்றபடி லக்ஷ்மணருடைய நடத்தையால் தெரியவருகிறது.

ஆறுவது.

"பரதன் சபைநடுவில் கதறினர்; புரோஹிதரை நிந்தித்தார்; 'நானும் ராஜ்யமும் ராமனுடையவைகள். இந்த விஷயத்தில் எது தர்மமோ அதைச் சொல்லும்படி ப்ரார்த்திக்கிறேன்'" என்பது முதல் "எவ்வளவு நல்ல வார்த்தை சொல்லியும் லக்ஷ்மணர் யௌவராஜ்யாபிஷேகஞ் செய்துகொள்ள ஸம்மதிக்காதபோது, மஹாத்மாவாகிய ராமன் பரதனுக்கு அபிஷேகம் செய்தார்" என்றதால் பரதன் முக்யமாக பகவானுக்கு ஸ்வாதீனமான வஸ்து வென்பது காட்டப்பட்டிருக்கிறது.

ஏழாவது.

"அம்மான் வீட்டிற்குப் போகும் பரதன், காமக்ரோதங்களை ஜயித்தவரும், தோஷமற்றவருமான சத்ருக்னரை ப்ரீதியுடன் தன்னுடன் கூடவே அழைத்துப்போனர்" என்றதால், பகவத் பக்தர்களுக்கு நாம் ஸ்வாதீனமா யிருக்கவேண்டுமென்ற தர்மத்தைச் சத்ருக்னர் நடத்திக் காட்டினரென்று சொல்லப்பட்டிருக்கிறது.

எட்டாவது.

இந்த க்ரந்தத்தில் ராமனுடைய சரித்ரத்தால் பரஸ்வரூபமும், லக்ஷ்மணருடைய சரித்ரத்தால ஜீவாத்ம ஸ்வரூபமும், சரணுகதியை வர்ணித்ததால் உபாய ஸ்வரூபமும், விபீஷணர் முதலியவர்களுடைய கதையால் பகவானுக்குக் கைங்கர்யம் செய்வதாகிற பலத்தின் ஸ்வரூபமும், ராவணன் முதலிய ராக்ஷஸர்களுடைய சரிதத்தால் விரோதி ஸ்வரூபமுமான ப்ரஹ்மம், ஜீவன், உபாயம், பலம், விரோதி என்ற ஐந்து அர்த்தங்களும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன.

ஒன்பதாவது.

1. ப்ரஹ்மா, பரமசிவன் இவர்களிடத்தில் வரம் பெற்ற ராவணன் ராமனிடத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியாமல் இறந்ததால், மேற்சொன்ன தேவதைகளும்;

2. தசரதர் தானிருக்கும்பொழுதே தன்னுடைய புத்ரர்களுக்கு நேரும் கஷ்டத்தை நிவர்த்திக்க முடியாமற்போனதால், பிதாவும்;

3. ஸீதைக்கு அபராதம் செய்த காக்கையை ஒருவரும் காப்பாற்ற முடியவில்லையென்றதால், தாய் முதலிய பந்துக்களும் ;

4. ராவணனை விபீஷணனும், கும்பகர்ணனும், இந்த்ரஜித் முதலியவர்களும் காப்பாற்ற முடியவில்லை, என்றதால், ஸஹோதரர்களும் புத்ரர்களும் நம்மைக் காப்பாற்ற அசக்தர்கள். நமக்கு பகவானைத் தவிர வேறுகதியில்லை யென்று உபதேசிக்கப்படுகிறது.

பத்தாவது.

ஸுந்தரகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஹனுமாருடைய சரித்ரத்தினால நாம் பகவானுடைய ஸ்வரூப ஞானத்தைக் குருமுகமாகவே அறியவேண்டுமென்று ஏற்படுகிறது.

பதினோராவது.

“சத்ருஸைன்யத்தை நாசஞ்செய்யும் ராமன், இந்த லங்கா நகரத்தைப் பாணங்களால் கலக்கி என்னை யழைத்துப் போவது அவருக்கு யோக்யம்” என்ற ஸீதாவசனத்தால் அதிகாரியானவன் இந்த ப்ராரப்த சரீரம் போகும்வரையில் பகவானையடையும் காலத்தை யெதிர்பார்த்திருக்கவேண்டியது என்று தெரியவருகிறது.

எப்படியென்றால், லங்கையென்பது சரீரம்; ராவணன், கும்பகர்ணன், நான் (அஹங்காரம்), என்னுடையது (மமகாரம்)என்ற வெண்ணங்கள்; இந்த்ரஜித் முதலானவர்கள், காமக்ரோதம் முதலியவைகள்; விபீஷணன், விவேகம், இந்தத் தேஹத்தில் ஸீதை யென்னும் ஜீவன் அடைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்குப் பகவானுடைய ஸ்வரூபஞானம், ஹனுமானென்ற ஆசார்ய முகமாய்க் கிடைக்கவேண்டியது; இந்தச் சரீரத்தை நாசஞ் செய்து அதில் சிறைப்பட்டிருக்கும் சைதன்யத்தை பகவானே விடுவிக்கவேண்டியது.

பன்னிரண்டாவது.

ஜீவன் சரீரமிருக்கும் வரையில் ராமன் முதலிய ஸாதுக்களைப்போல் நடந்துகொள்ள வேண்டுமேயொழிய ராவணன் முதலியவர்களைப்போல் நடந்துகொள்ளக்கூடாது.

பதின்மூன்றாவது.

கோஸல தேசத்திலிருக்கும் ஜனங்களுடைய விருத்தாந்தத்தால் நாம் பகவானிருக்கு மிடத்திலேயே வாஸஞ்செய்ய வேண்டியதென்று தெரியவருகிறது.

பதினான்காவது.

ராமாயணமானது த்வயமென்னும் மந்த்ரத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்துவதால் நாம் ராமாயண பாராயணம் செய்தே நம்முடைய வாழ்நாளைக் கழிக்கவேண்டும். எப்படி யென்றால்: பாலகாண்டத்தில் "ஸ்ரீமத்" என்றதின் அர்த்தமும்; அயோத்யா காண்டத்தில் பகவானுடைய கல்யாண குணங்களை வர்ணிப்பதால் "நாராயணஸ்ய" என்றதினர்த்தமும்; ஆரண்ய காண்டத்தில் பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை வர்ணிப்பதால் "சரணௌ" என்றதினர்த்தமும்; கிஷ்கிந்தா, ஸுந்தர காண்டங்களில் "சரணம்" என்றதினர்த்தமும்; யுத்தகாண்டத்தில், "ப்ரபத்யே" என்றதினர்த்தமும்; உத்தரகாண்டத்தில் முக்தியென்னும் பலத்தை வர்ணித்திருப்பதால் த்வயத்தின் இரண்டாவது பாகத்தினர்த்தமும் விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

பதினைந்தாவது.

நாம் எப்பொழுதும ராமாயணத்தையே ஜபிக்கவேண்டிய மந்த்ரமாகக் கொள்ளவேண்டியது. ஏனென்றால் பால காண்டத்தில் ஸகல ஜகத்திற்கும காரணமென்று வேதத்தில சொல்லிய பகவானுடைய ஸ்வரூபத்தையும்; அயோத்யா காண்டம், கிஷ்கிந்தா காண்டங்களில் பகவானுடைய கல்யாண குணங்களையும்; ஆரண்ய காண்டத்தில் தேஜோமயமான சரீரத்தையும்; ஸுந்தர காண்டத்தில் பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் லக்ஷணத்தையும்; யுத்தகாண்டத்தில் சரணாகதியையும்; உத்தர காண்டத்தில் முக்திபலத்தையும் விவரித்திருப்பதால், ராமாயணத்தில் காயத்ரீ மஹா மந்த்ரத்தினர்த்தமுபதேசிக்கப்பட்டிருக்கிறது.

பதினாறாவது.

ஜாபாலி, லக்ஷ்மணர் இவர்களுடைய வாக்யங்களாலும், அவைகளை ராமன் நிராகரித்திருப்பதாலும், நாம், சார்வாகன், பௌத்தன் முதலியவர்களுடைய நாஸ்திக க்ரந்தங்களின் ஸமீபத்திலும் போகக்கூடாது என்று காட்டப்பட்டிருக்கிறது.

பதினேழாவது.

மஹான்களுக்குக்கூடக் கஷ்டங்கள் நேரிடுகின்றன; ஆகையால் நாம் இந்த ஸம்ஸாரத்தில் பற்றில்லாமல் வைராக்யத்தை யடையவேண்டியது என்ற விஷயமானது, நாகாஸ்த்ரம், ப்ரஹ்மாஸ்த்ரம் இவைகளால் ராமன் கட்டுப்பட்டது, ஸீதையை விட்டுப் பிரிந்தது, காட்டிற்குப்போனது முதலியவைகளால் காட்டப்பட்டிருக்கிறது.

ராமாயண ரஹஸ்யார்த்தம். ii.

தேஹராமாயணம்.

ஸச்சிதானந்த ரூபமாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவே ஸமுத்ரம். அவருக்குப் பூமியின் பாரத்தைப் போக்கவேண்டுமென்றுண்டாகும் விருப்பமே அந்த ஸமுத்ரத்தில் தோன்றும் அலை. அதிலிருந்து வெளியில் தெறிக்கும் திவலையே ஆத்மா. அயோத்யா நகரமென்பது ஹிருதயாகாசமே. அதின் அரசனாகிய தசரதர் ஸத்வகுணத்தை ப்ரதானமாயுடைய சுத்த அந்தக்கரணம். அவருடைய பத்னியாகிய கௌஸல்யை ஸாத்விகபுத்தி. இவ்விருவர்களுடைய புத்ரனாகிய ராமன் துரீயாவஸ்தையில் விளங்கும் ஆத்மா. லக்ஷ்மணன் ஜாக்ரதவஸ்தையில் விளங்கும ஆத்மா. பரதன் ஸ்வப்னாவஸ்தையுள்ள ஆத்மா. சத்ருக்னன் ஸுஷுப்தி அவஸ்தையுள்ள ஆத்மா. இபபடி நான்கு குமாரராகரூம ஆதமாவின் பேதங்கள்.

ராமன் விச்வாமித்ரருடைய யாகத்தைக் காப்பாற்றுவதற்கு அயோத்யா நகரத்தைவிட்டுப போனாரென்பது, துரீயாத்மா மனோவேகத்தால் இழுக்கப்படுதல். தாடகையைக்கொன்றது, மனதின் கெட்ட விருததியை நாசஞ்செய்தது. பரமசிவனுடைய வில்லை முறித்தாரென்பது, மனோவேகபங்கம். ஸீதையை விவாஹம் செய்துகொண்டது, மாயாஸமபந்த மடைந்தது. பரசுராமரை ஜயித்தது, பூர்வஸம்ஸ்காரங்களை யடக்கினது. கைகேயியின் அனுமதிப்படி தண்டகாவனத்தில பரவேசித்தல, தாமஸபுத்தியின் தூண்டுதலால் ஆதமா ஸம்ஸாரத்தை யடைவது. விராதனைக்கொன்றது, தம்பத்தை நாசஞ்செய்தது. பஞ்சவடியில பாணசாலை கட்டிக்கொண்டு வஸித்தல், ஐந்து பூதங்களின் சேர்க்கையாலுண்டாகும் நிலையற்ற தேஹத்தையடைந்து சரமம் தீர்த்துக் கொள்ளுதல். அவ்விடத்தில் சூர்ப்பநகையின் காது மூக்குகளை யறுத்தல், ஆசையை நிக்ரஹித்தது. கரன், தூஷணன், த்ரிசிரஸ் இவர்களைக்கொன்றது முறையே காமம், க்ரோதம், லோபம் இவைகளை யழித்தது. மாரீசனைக்கொன்றது, மோஹத்தை யொழித்தலாம். ஸீதையை விட்டுப பிரிந்தது, சுத்தமாயையை விடடுப் பிரிந்ததேயாகும். ஸீதாதேவியை ராவணன் அபஹரித்தது, சுத்த மாயையை அஹங்காரம் கவர்ந்துகொண்டதாம். கபந்தனைக்கொன்றது, துக்கநாசமே. ஹனுமானை ஸந்தித்தது, மிகுந்த பக்தியை யடைவதே. ஸுக்ரீவனை அண்டினது, விவேகத்தை யடைந்ததாகும். வாலியைக் கொன்றது, அவிவேகத்தை நாசஞ் செய்ததே. விபீஷணனுடன் ஸ்னேஹம் செய்தது, உத்ஸாஹத்

தை யடைந்ததே. ஸமுத்ரத்தில் அணை கட்டினது, அஜ்ஞானத்தைத் தாண்டுமுபாயம். த்ரிகூடமென்ற மலையிலுள்ள லங்கையே முக்குணங்களுள்ள லிங்கதேஹம். கும்பகர்ணவதம், மதத்தை நிக்ரஹித்தல். இந்த்ரஜித்தைக்கொல்வது, மாத்ஸர்யத்தை யடக்குவது. ராவணவதம், அஹங்காரத்தை யொழித்தல். ஸீதை அக்னிப்ரவேசம் செய்தல், அஹங்கார ஸம்பந்தத்தால் தாமஸ ஸம்பந்தமுள்ள அசுத்த மாயை சுத்தியடைந்தது. லங்கையை விட்டுப்பிரிந்தது, லிங்க தேஹத்தைவிட்டுப் பிரிந்ததேயாம். மறுபடி அயோத்யா நகரம் வந்து சேர்ந்தது, ஹ்ருதயாகாசத்தை யடைந்ததே. அவ்விடத்தில் ராஜ்யபோகமனுபவிப்பது, ஆனந்த ரூபமாகிய ஸுகானுபவமே.

ஸீதையை வால்மீகியின் ஆச்ரமத்தின் ஸமீபத்தில் விட்டது, மாயையின் பரித்யாகம். மறுபடியும் ஸீதையை அங்கீகரித்தது, ஸாத்விகமாயையின பரிக்ரஹமே. முடிவில ஸரயூநதியில் ப்ரவேசித்தது, ஹ்ருதயாகாசததை மஹாகாசத்தில் லயப்படுத்தி ஸச்சிதானந்த ரூபத்தில் ப்ரவேசிப்பது. அதுவே முக்தி.''—(ஆனந்த ரா-விலாஸ காண்டம்.)

ராமாயண ரஹஸ்யார்த்தம். iii.

நூறு யோஜனை விஸ்தீர்ணமுள்ள ஸமுத்ரம், நான், என்னுடையது என்னும அபிமான ரூபமான ஸம்ஸார ஸமுத்ரம். லங்காநகரம், ஜீவனுடைய சரீரம். ஆத்மாவைத்தவிர ஸகல ப்ரபஞ்சமும் ஸ்தரீக்கு ஸமமானது. அவித்யையே அசோக வனமென்பது. ஜீவனுடைய சுததத்த்வ ப்ரதானமாகிய புத்தியே, ஹனுமான். தாமஸ ராஜஸ ஸத்வகுணங்களே, கும்பகர்ணன், ராவணன், விபீஷணன். ஜீவனுக்குத தாரகமந்த்ரத்தை யுபதேசிப்பது, ஸீதைக்கு ஹனுமான் முத்ரை மோதிரம் கொடுத்ததாகும். பகவானைத்தவிர மற்ற வஸ்துக்களுக்குத் தான் அடிமையென்கிற எண்ணத்தை அடியோடே தொலைப்பதே லங்கையைக் கொளுத்தினது. ஜானகியின் சோகத்தை ராமனுக்கு அறிவித்தல, ஜீவனுடைய சோக மோஹங்களை ஈச்வரனிடத்தில் முறையிடுதல். ராமன் லங்கைக்கு வருதல, சரீரத்திலுள்ள ஜீவனுக்கு ஈச்வரன் தர்சனம் கொடுத்தல். ராவண கும்பகர்ணாதிகளின் வதம், ராஜஸ தாமஸ குணங்களுடைய நாசம். ராவணனுடைய மந்த்ரி, பரிவாரங்கள், ராஜஸதாமஸ குணங்களுடைய விருத்திகள். விபீஷணனை லங்கையில் அபிஷேகம் செய்வித்தல், சரீரத்தில் ஸத்வகுணத்தை ப்ரதிஷ்டைசெய்தல். ராவண வதத்திற்குப் பின்பு ஸீதையை வர

வழைத்தல், ஜீவனை ஞானமயஞ்சுச் செய்தல். ஸீதை அக்னி யில் பரிசுத்தியடைவது, ஜீவன் விரஜாநதியில் ஸ்நானத்தால் ஸூக்ஷ்ம சரீர வாஸனைகளை நாசஞ்செய்தல். அக்னி பகவான் தன்னுடைய கைகளால் ஸீதையை ராமனுடைய ஸன்னிதியில் சேர்ப்பித்தல், தேவதாகாக்ரஹண யோக்யமான பஞ்சோபனி ஷத் மயமான திவ்ய சரீரத்தால் மோக்ஷமடைதல். ஸீதை ராம னுடன் புஷ்பக விமானத்தில் செல்லுதல், ஜீவன் ஈசவரனோடு ஒரே ஆஸனத்திலிருத்தல். ஸ்ரீராம பட்டாபிஷேகம், ஜீவன் பரப் ரஹ்மமாதல. ஸுக்ரீவன் அங்கதன் முதலியவர்கள், மனஸ், சித் தம் முதலியவைகள். வானரக்கூட்டங்கள், மனஸின் ஸங்கல்பம் முதலியவைகள். ஸுக்ரீவனுடைய மதுவனத்தை நாசஞ்செய்தல், மனஸின் ஸந்தோஷம் உத்ஸாஹம் முதலிய விருத்திகளின் நாசம். ராமன் தன் ஸேனைகளோடு ஸமுத்ரத்தைத் தாண்டுதல், நான் என்னுடையது என்ற அபிமான ஸமுத்ரத்தைந் தாண்டுதல்— பெரியோர்கள்.

ராமாயண ரஹஸ்யார்த்தம். iv.

அகாரமென்ற அக்ஷரத்திலிருந்து உண்டானவர் லக்ஷ்ம ணர்; இவரே விச்வன். உகாரத்திலிருந்து உண்டானவர் சத்ருக னன்; இவரே தைஜஸன். மகாரத்திலிருந்து உண்டானவர் பர தன்; இவரே ப்ராக்ஞன். அர்த்தமாத்ரையின் ரூபம் ப்ரஹ்மா னந்தஸ்வரூபனை ஸ்ரீராமன். ஸீதையே மூலப்ரகிருதி. இவள் ஸ்ரீராமனுடைய ஸன்னிதான விசேஷத்தால் ஸகல ஜகத்திற்கும் ஸிருஷ்டி, ரக்ஷணை, ஸம்ஹாரம் என்ற மூன்று கார்யங்களையும செய்கிறாள். இவள் ப்ரணவரூபியா யிருப்பதால ப்ரகிருதியென னும் சொல்லப்படுகிறாள்.

ஸ்ரீயோகீச்வர யாக்ஞவல்க்ய மஹர்ஷி அத்ரியை நோக்கிச் சொன்னதாவது, "காசீக்ஷேத்ரத்தில் பரமசிவன் ஸ்ரீராம மந்தரத் தை அநேக மன்வந்தரங்களாக ஜபித்து ஹோமங்கள் செய்து ஸ்ரீராமனை அர்ச்சித்தார். அப்பொழுது ஸ்ரீராமன் பரமசிவனிடம் கிருபை செய்து 'சங்கர! தமக்கு வேணடியதைக் கேட்கலாம், கொடுக்கத் தயாராயிருக்கிறேன்' என்றார்.

அப்பொழுது பரமசிவன் ஸச்சிதானந்த ஸ்வரூபியான ஸ்ரீரா மனை நோக்கி, 'ராம! என்னுடைய க்ஷேத்ரமாகிய மணிகர்ணி கையிலும், கங்கையின் கரையிலும் மரணமடையும ஸகல ப்ராணி களும் முக்தர்களாகவேண்டும். இந்த வரத்தைக் கொடுக்கவேண் டும்' என்று கேட்டார்.

ஸ்ரீராமன், 'பரமசிவ! தம்முடைய க்ஷேத்ரத்தில் எந்த விடத்திலாவது மரணமடைந்தவர்கள், மனிதர்களானாலும், பக்ஷிகளானாலும், பறவைகளானாலும், பூச்சி புழுக்களானாலும், எல்லா ப்ராணிகளும் மோக்ஷமடையட்டும். இப்படி எல்லா ப்ராணிகளும் முக்தர்களாகவேண்டியதற்காக, தம்முடைய இந்த அவிமுக்த க்ஷேத்ரத்தில் கல்லினாலும், தங்கம் முதலிய லோஹங்களாலும் செய்யப்பட்ட ப்ரதிமைகளில நான் வஸிக்கிறேன்' ஆகையால் இந்த க்ஷேத்ரத்தில் யார் ராம மந்த்ரத்தால் என்னைப் பூஜிக்கிறார்களோ அவர்களை ப்ரஹ்மஹத்யா முதலிய பாபங்களைச செய்திருந்தாலும் பரிசுத்தர்களாகச் செயதுவிடுகிறேன்; நீர் கவலைப்பட வேண்டாம். தம்மிடத்திலிருந்தாவது, ப்ரஹ்மாவிடத்திலிருந்தாவது, எவர்கள் ராம ஷடக்ஷர மஹாமந்த்ரத்தை உபதேசம பெறுகிறார்களோ, அவர்கள் மந்த்ரஸித்தியுள்ளவர்கள். அவர்கள் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு என்னை யடைவார்கள். ஓ, பரமசிவ! சாகுந்தருணத்தில் எவனுடைய வலது காதில் என்னுடைய மந்த்ரத்தை நீ உபதேசிக்கிறீரோ அவன் முக்தனாவான்''' என்றார். பாரத்வாஜரால கேட்கப்பட்டு ஸ்ரீயோகீச்வர யாக்ஞவல்கயர் பின் வருமாறு சொன்னார்.

''சித்ஸ்வரூபியும், ஸ்வப்ரகாசரும், விசேஷ தேஜோரூபியுமான ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியே ராம மந்த்ரத்தின் முதல அக்ஷரத்தின் அர்த்தம். ஸகல தேவர்களும் தாங்கள் மோக்ஷ ஸுகத்தை யனுபவிக்க விரும்பி மனஸால ராமனையே நமஸ்கரிக்கிறார்கள். இந்த ஸ்ரீராம மஹாமந்த்ரத்தை எவன் பக்தியுடன் நித்யம் ஜபிக்கிறானோ அவன் பலவகையிலும் சுத்தனாகிறான். அவனுக்கு ஸகல யாகங்கள் செய்த பலன் கிடைக்கும. இதிஹாஸங்கள், புராணங்கள், ருத்ரம இவைகளை லக்ஷம் தடவை ஜபித்த பலம் கிடைக்கும். ஸ்ரீராமசந்த்ரனை ஸ்மரித்தமாத்ரத்தில காயத்ரீ மஹாமந்த்ரத்தை லக்ஷம் தடைவை ஜபித்த பலம கிடைக்கிறது. அனேககோடி ப்ரணவ ஜபஞ்செய்த புண்யமேற்படும். முந்திப் பத்துத் தலைமுறைகளையும் பிந்திப் பத்துத் தலைமுறைகளையும் பரிசுத்தப்படுத்துகிறான். பந்திபரிசுத்தனாக ஆகிறான். மஹானாக ஆகிறான். மோக்ஷத்தையுமடைகிறான்'' என்றார். இந்த விஷயத்தைப் பின்வரும் ச்லோகங்களும் தெரிவிக்கின்றன.

''கணபதி, சிவன், சக்தி, ஸூர்யன, விஷ்ணு இவர்கள் ஸம்பந்தமான ஸகல மந்த்ரங்களில் ராமமந்த்ரமே மேலானது. உத்தம பலத்தைக் கொடுக்கக்கூடியது. ஆறு அக்ஷரங்களுள்ள இந்த மந்த்ரமொன்றே எளிதில் பலத்தைக் கொடுக்கக்கூடியது. ஸகல

பாபங்களையும் போக்கும் வல்லமையுள்ளது. இதனாலே மந்த்ரராஜமென்று இதற்குப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. நாள், பக்ஷம், மாஸம், வர்ஷம் இவைகளில் செய்த எல்லா பாபங்களையும் ராமமந்த்ரமானது பஞ்சுப்பொதியை அக்னி தஹிப்பதுபோல தஹித்துவிடும். ப்ரஹ்மஹத்யை, தங்கத்தைத்திருடுவது, ஸுராபானம், ஆசார்யனுடைய ஸ்த்ரீயை அனுபவிப்பது என்ற மஹாபாபங்கள் தெரிந்தாவது தெரியாமலாவது கணக்கில்லாமல் செய்யப்பட்டிருந்தாலும், அவைகளும் அனேக கோடி உபபாதங்களும் இந்த மந்த்ரத்தை ஜபிப்பதினால் நிவர்த்தியாகின்றன. பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசங்கள், கூச்மாண்ட க்ரஹங்கள், ராக்ஷஸர்கள், ராமமந்த்ர ஜபம் செய்கிற இடத்தைவிட்டு ஓடிப்போகின்றன. இந்த மந்த்ரத்தால் இவ்வுலகத்தில் ஐச்வரியமும், பரலோகத்தில் ஸ்வர்க்காதி ஸுகமும், மோக்ஷ ஸாம்ராஜ்யமும் கிடைக்கின்றன. க்ராமத்திலும் அரண்யத்திலுமிருக்கும் பசுக்களைக் கொல்வதாலுண்டான பாபங்களும், ஸஞ்சிதபாபமும், புஜிக்கக்கூடாதவைகளை புஜிப்பதனாலுண்டாகும் பாபமும் இதனால் நாசமாக்கப்படும். வேதாத்யயனஞ் செய்த ப்ராஹ்மணனைத் தமனுடைய ஸ்வர்ணத்தை அபஹரிப்பதாலும், ரத்னங்களை யபஹரிப்பதாலும், ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களைக் கொல்வதாலுமுண்டாகும் பாபமும் இந்த மஹாமந்த்ரத்தினால் நாசஞ் செய்யப்படுகிறது. தாயைப் புணர்ந்ததாலும், புணரக்கூடாத ஸ்த்ரீகளைப் புணர்ந்ததாலுமுண்டாகும் பாபத்தை மந்த்ரத்தால் உபாஸிக்கப்படும் ஸ்ரீராமன் போக்கடிக்கிறார். மஹாபாபிகளுடைய சேர்க்கையாலும் அவர்களுடன் உட்கார்ந்திருத்தல், போஜனஞ்செய்தல், படுத்தல் இவைகளாலுமுண்டாகும் பாபங்கள விலகிவிடும். தாய்தகப்பன்களைக் கொன்றதாலுண்டான புத்தி பூர்வமான பாபமும் விலகிவிடும். ப்ரயாகை முதலிய க்ஷேத்ர யாத்ரை செய்வதாலும், ப்ராயச்சித்தத்தாலும் எந்த பாபம் விலகாதோ அந்தப் பாபமும் ராமமந்த்ரத்தினால் நாசமாக்கப்படும். குருக்ஷேத்ரம் முதலிய எல்லா புண்ய க்ஷேத்ரங்களிலும் புத்தி பூர்வமாகச் செய்த பாபங்களும், தப்தம், பராகம், சாந்த்ராயணம் முதலிய கிருச்ரங்களால் போக்கமுடியாத பாபங்களும், தன்னுடைய நிறைக்கு ஸமமான தங்கத்தைத் தானம் செய்வதால் போக்கமுடியாத பாபங்களும், மூன்று அவஸ்தைகளிலும் தெரிந்து செய்த பாபங்களும், நியமம் தவறினதாலுண்டான பாபங்களும் ராம மந்த்ர ஜபத்தால் விலகிவிடும்.

எங்கெங்கு தேசங்களில் ஸ்ரீராமசந்த்ரனை உபாஸிக்கிறார்களோ அவ்விடத்தில் பஞ்சம் முதலிய தேசோபத்ரவங்கள் நேரிடாது. இதற்கு ஸமமான மந்த்ரம் வேறில்லாததினால் உத்தமமான இந்த மந்த்ரத்தால் ஆராதிக்கப்பட்டுப் புருஷோத்தமனான ஸ்ரீராமன் ப்ரசன்னராய் இவ்வுலகத்தில் தீர்க்கமான ஆயுளையும் ஐச்வர்யத்தையும் கொடுத்துக் கடைசியில் தனது பதத்தையும் கொடுக்கிறார்."—(ராமதாபினீ உபநிஷத்.)

ராமாயண ரஹஸ்யார்த்தம். V.

ஹநுமான், ஸனகர் முதலிய யோகிகளை நோக்கி: "ராமனே பரப்ரஹ்மம்; பரதத்வம்; தாரகப்ரஹ்மம். ராம மந்த்ரத்தினுடைய அர்த்தம், அதையே ஜபித்துக்கொண்டிருக்கும் பரமசிவனுக்குத் தெரியுமேயன்றி வேறொருவருக்குத் தெரியாது. நாராயண ஸம்பந்தமான அஷ்டாக்ஷர மந்த்ரத்திலும், பரமசிவ ஸம்பந்தமான பஞ்சாக்ஷரத்திலும் ஸாரமான அக்ஷரங்களாலமைக்கப்பட்டது ராம என்னும் மந்த்ரம். அதில் "ர்" என்னுமக்ஷரம் அக்னி பீஜமாகையால் ப்ரகாசமென்று அர்த்தம் (ஸச்சிதானந்த ரூபியும் பரகாச ஸ்வரூபமுள்ளவருமான பரமாத்மா). 'ர்' என்னும் மெய்யெழுத்து (வ்யஞ்ஜனம்) உபாதிஸம்பந்தமில்லாத ப்ரஹ்மத்தைக் காண்பிக்கிறது. 'ஆ' என்னும் உயிரெழுத்து (ஸ்வரம்) மாயையைக் காண்பிக்கிறது. இவ்விரண்டின் சேர்க்கையே சுத்த தேஜோமயமான ஆத்மாவிற்கு மாயா ஸம்பந்தத்தைக் காட்டுகிறது. 'ம' என்னும் அக்ஷரம் அமிருதபீஜம்; க்ஷேமத்தைக் காட்டுகின்றது.

எப்படிக் (காரணமான) ஆலம்விதையில் (கார்யமான) அனேக கிளைகளுள்ள பெரிய மரம் அடங்கியிருக்கிறதோ, அப்படி ராமபீஜத்தில் சரம், அசரம் இவைகளடங்கிய ஸகல ஜகத்தும் அடங்கியிருக்கிறது. மாயாஸம்பந்த மில்லாததே பரப்ரஹ்மம். மகாரம் முக்தியைக் கொடுக்கக்கூடியது, மஹாவாக்யத்திலுள்ள 'தத்' பதத்தின் அர்த்தத்தை 'ரா' என்ற முதலெழுத்தும், 'த்வம்' பதத்தினர்த்தத்தை இரண்டாவதான 'ம' காரமும், இவ்விரண்டெழுத்தின் சேர்க்கையானது, 'அஸி' என்றதின் அர்த்தத்தையும் காட்டுகிறது. ஆனால் மஹாவாக்யம் மோக்ஷத்தை மாத்ரம் கொடுக்குமேயல்லாது இவ்வுலகத்து ஸுகத்தைக் கொடுக்காது. இந்த ஸ்ரீராம மந்த்ரம், மோக்ஷம, முக்தியென்ற இருவகைப் பலத்தையும் கொடுக்கக்கூடியதாகையால், இது மஹா